அறைவு 02 இயம் 18 December 07 - 13 , 2013





# மலைமுரசு
MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்


# கணிப்பீடா? கண்துடைப்பா



முப்பது வருடகால யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான புள்ளி விபரங்களை மதிப்பிடும் வேலைகளில் உண்மை விபரங்களை இருட்டடிப்புச் செய்யும் நடவடிக்கைகள் இடம் பெறுவதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இவ் இருட்டடிப்பின் ஊடாக கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மறைக்கப் படுவதுடன் கொல்லப்பட்ட விதம் அல்லது கொலை செய்த குழுவின் உண்மை விபரமும் மறைக்கப்படும் எனத் தெரிகின்றது. 13
ஒரு குடும்பம் முழுவதுமாக யுத்தத்தில் உயிரிழந்திருந்தால் அவர்களின்



"உரிமைக்காகப் போராடிய உண்மை மனிதனின் மறைவையிட்டு மலைமுரசு துயருருகின்றது"

## கிழக்கின் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது

### த.தே.கூ- ஐ.தே.க எதிர்ப்பு



மீண்டெழும் செலவினம் 15,010 மில்லியன்

வருமானம் 2510 மில். மானியம் 12,500 மில்.

மூலதனச் செலவினம் 3,546 மில்லியன்

கிழக்கு மாகாணத்திற்கான 2014ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டமானது 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் முஸ்லிம் காங்கிரசும் ஆதரித்து வாக்களிக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்த்து வாக்களித்துள்ளன.

### கல்வித்துறைக்கு 549 மில்லியன் சுகாதார சேவைக்கு 637 மில்லியன்

### மாகாணசபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அபிவிருத்தி செலவாக 3 மில்லியன்கள்



## 'மாணவர்கள் கொல்லப்பட்டது ஓர் திட்டமிட்ட செயலே'

### -சிரேட்ட சட்டத்தரணி சுபாசினி-

திருகோணமலையில் ஐந்து மாணவர் படுகொலை வழக்கில் கொலை செய்யப்பட்ட மாணவர் ஒருவரின் சார்பில் முன்னிலையான பதில் நீதவானும், சிரேட்ட சட்டத்தரணியுமான சுபாசினி அவர்கள் இம் மாணவர்கள் ஐந்து பேரும் திட்டமிட்டே படுகொலை செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 3ம் திகதி திருகோணமலை நீதிமன்றில் இவ்வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்ட போதே இவ்வாறு நபர்களான 12 அதிரடிப்படையினரும் மன்றில் நிறுத்தப் பட்டிருந்தனர். படு-கொலை நடந்த தினத்தில் பதில் நீதிவானாக தானே கடமையாற்றியதாகவும், சம்பவம் நடந்தவுடன் அவ்விடத்திற்குப் பதில் நீதிவானாகச் சென்றதாகவும் தெரிவித்த அவர் அவ்விடத்திற்கு சென்றபோது அங்கு திட்டமிட்ட கொலைகளே நடந்திருந்ததை உணரமுடிந்த...... 13

## "படையினரே படுகொலைகளுக்கு காரணம்" அக்ஸன்பெய்ம்

## "ஆதாரமற்ற குற்றச்சாட்டு" இராணுவம்



மூதூரில் 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட 17 தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களின் கொலைகளுக்கு இலங்கையின் அரச படைகளே காரணம் என "அக்ஸன் பெய்ம்" அமைப்பு வெளிப்படையாகக் குற்றஞ் சாட்டியுள்ளது. படைகளின் மீது இவ்வாறு வெளிப்படையாக குற்றஞ்சாட்டுவது முதல் முறையாக நிகழ்ந்துள்ளது குறிப்பிடதக்கது. கடந்த 03ம் திகதி இவ்வமைப்பின் உத்தியோகபூர்வ பிரித்தானிய இணையத்தளத்தில் " 17 மனிதாபிமானத்....... 13



- வடக்கின் முதல்வர் -

## கிழக்கில் எது நிகழ்ந்ததோ... அதுவே வடக்கிலும் நிகழ்கின்றது. சர்வதேசமே... தடுத்து நிறுத்து"

"கிழக்கில் எவ்வாறு சிங்கள காலனித்துவத்தை இராணுவத்தை கொண்டு அரசு நிறைவேற்றியதோ அதே போலவே வடக்கிலும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. வலிகாமத்தில் சுமார் 6000 ஏக்கர் நிலம் கையாடப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளை பார்க்கும் போது அடுத்த நூறு வருடங்களுக்கு இராணுவம் வடக்கில் நிலைகொள்ளும் போலுள்ளது. இதனைத் தடுக்க எம்மால் மட்டுமே முடியாது. எனவே சர்வதேச சமூகமே நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். என வடக்கின் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இன்று முதல் மலைமுரசின் விலை 30.00 ரூபாவாக அதிகரிக்கின்றது. மலைமுரசை ஆதரியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### கணக்கெடுப்பு.....

உண்மையான இணக்கத்தை ஏற்படுத்தும் வரைக்கும் இலங்கைத் தீவில் அமைதியென்பது இல்லை என்பதை எப்போது தான் புரிந்து கொள்ளப் போகின்றார்களோ தெரியவில்லை.

தனது நாட்டு மக்கள் எவ்வளவு பேர் போரினால் அழிந்தார்கள் என்பதைக் கூட சரியாகக் கணக்கிட இலங்கை அரசு தயாராகவில்லை என்பதையே இப்போது பிரதேசங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நடவடிக்கைகள் வெளிக்காட்டி வருகின்றன.

இலங்கைத் தீவில் வாழும் ஆதிக் குடிகளான தமிழரின் பண்பாட்டின்படி தள்ளாத வயதில் தாயும், தகப்பனும் தம் குழந்தைகளை நம்பியே வாழ்வது பண்டைக்காலம் தொட்டு வழமையாகவுள்ளது. அக் குழந்தைகள் திருமணம் முடித்திருந்தாலும் அவர்களுடனேயே அப் பெற்றோர் வாழுகின்றனர்.

மாறாக திருமணம் முடித்து மனைவியையோ, கணவனையோ இழந்தவர்கள் தமது தாயின், தகப்பனின் நிழலில் வாழ்வது காலாகாலமாக நிகழ்கின்றது.

அவ்வாறே நெருங்கிய உறவுகள் மற்றொரு உறவின் ஆதரவில் வாழ்வது இயல்பாகவே எம்முள் பின்னிப் பிணைந்த விடயமாக உள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தனது உயிரைக் காப்பதற்காக எத்தனையோ குழந்தைகள், தாம் ஒரு பிள்ளையாக இருந்த போதிலும் தமது தாய் தகப்பனை விடுத்து பரதேசம் பயணப்பட்டு விட்டனர். அவர்கள் அங்கு திருமணம் முடித்து வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு நடவடிக்கைகளிற்கு மேற்போந்தவர்கள் தகவல்களைப் பதிய முடியாது எனத் தெரவிக்கப்பட்டுள்ளது. அதாவது தாய், தகப்பன் தம்முடன் இருந்து யுத்தத்தில் இறந்திருந்தாலும் மகனோ மகளோ அவர்களின் பெயரைப் பதிய முடியாது. அவ்வாறே திருமணமான மகன் அல்லது மகள் இறந்திருந்தாலும் பெற்றோர் அதனை பதிய முடியாது.

இதற்கும் மேல் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட மக்களில் குடும்பமாக அழிந்தவர்களின் பதிவுகள் எவராலும் மேற்கொள்ளப்பட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் "பதிய முடியாது" என்பதே அதிகமாகக் கொண்ட பத்திரமாக இப் பதிவாவணம் தமிழர்களின் வீடு நோக்கி வருகின்றது.

இப்போது நாம் காத்திரமான முடிவொன்றை எடுக்க வேண்டும்.

அதனைத் தமிழ்த் தலைவர்கள் உடனடியாகவே அறிவிக்க வேண்டும்.

பதியமுடியாது என்று அவர்கள் சொல்வதா அல்லது பதிய மாட்டோம் என நாம் சொல்வதா? என்பதே அந்த அறிவிப்பு.......

அறிவிப்பார்களா?......

## புதிய வைத்திய அத்தியட்சகர் பதவியேற்பு

திருகோணமலைப் பொது வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்திய கலாநிதி மஞ்சுள கவிசேகர கடந்த 01.12.2013லிருந்து பதிவியேற்றுள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் பணியாற்றிவந்த இவர் நீண்ட சேவை அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் சுகாதார அமைச்சில் 8 வருட சேவையையும் பூர்த்தி செய்துள்ளார். வைத்திய முகாமைத்துவ முதுகல்விப் படிப்பை நிறைவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீண்டகாலமாக திருமலைப் பொதுவைத்திய சாலையின் அத்தியட்சகராக வைத்திய கலாநிதி ஞானகுணாளன் அவர்கள் பணியாற்றி வந்தார். அவர் கடந்த 30ம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளதைத் தொடர்ந்து வைத்தியர் மஞ்சுள



கவிசேகர வைத்திய அத்தியட்சகராகப் பணியேற்றுள்ளார்.

மக்களின் நலனைக் குறிக் கோளாகக் கொண்டு பணியாற்ற விருப்பதாக அவர் மலைமுரசிற்கான பிரத்தியேகச் செவ்வியில் குறிப்பிட்டார்.

(அனுர-உதய)

## கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையை உருவாக்கும் சட்ட வரைபு சபையில்....



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் பல திணைக்களங்கள் உள்ளன.

இது வரையில் வீடமைப்பு அபிவிருத்திக்கு என்று எதுவித திணைக்களமும் இல்லை. எனவே எமது அமைச்சின் கீழ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும் கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வீடமைப்பு நிர்மாணமும் என்ற துறையானது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஓர் மிகவும் முக்கியமான துறையாகும். மக்களினது வாழ்வாதாரத்தை மேண்படுத்தும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், உள்நாட்டு வெளிநாட்டு வளங்களை பெற்று வீடமைப்பு வசதிகளை தகுந்த முறையில் எம் மாகாண மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்கும் இத்துறை மூலமான நடவடிக்கை மிக அவசியமாகும் என கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்பாசன, விடமைப்பு, கிராமிய மின்சார மற்றும் நீர வழங்கல் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார். கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை ஒன்றினை தனியாக உருவாக்குவது தொடர்பான சட்டவரைபு ஒன்றினை சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டா

## அடுத்தடுத்துக் கைதாகியுள்ள திருமலை மீனவர்கள்

கடந்த 4ம் திகதி கடலுக்குச் சென்ற குளிர்த்தாங்கி பொருத்தப்பட்ட "நடும்-2" எனும் படகானது வீடு திரும்பவில்லை. அதில் பயணித்த நாலு மீனவர்களும் படகுடன் இந்தியக் கடையோரக் காவற் படையால் கைதாகியிருப்பது அடுத்த இரு நாட்களில் தெரிய வந்தபோது மேலும் மூன்று குளிர்த்தாங்கி பொருத்தப்பட்ட படகுகளில் கடலுக்குச் சென்ற 16 மீனவர்கள் வீடு திரும்பவில்லை.

5ம் திகதி இரவு கடலுக்குப் புறப்பட்டுச் சென்ற " ஜெயலக்ஸ்மி, மகிந்தபுத்தா, திஸ்ஸ ஆகிய படகுகளும் மீனவர்களும் இந்தியக் கடலோரக் காவல் படையால் கைதாகியிருப்பது நேற்று மதியம் தெரிய வந்துள்ளது.

(கீத்)

## கணக்கெடுப்பில் கைகலப்பு - மனித உரிமைக்கு முறையீடு

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் போர் அழிவு தொடர்பான கணக்கெடுப்பில், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் பொது மக்களுக்கும் கணக்கெடுப்புக்குச் செல்லும் கிராம சேவையாளர்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தக் கணக்கெடுப்புக் குறித்து மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இவ்வாறான மட்டுப்பாடுகளுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் வியாழக்கிழமை (05.12.13) முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காவல்துறைப் பணிகளில் இராணுவம் ஈடுபடக்கூடாது



இராணுவத்தினர் காவல்துறைப் பணிகளில் ஈடுபடுத்தப்படக் கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்த வேண்டிய அவசியமில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சட்டம் ஒழுங்கு விவசாரங்களில் காவல்துறையினர், இராணுவத் தினரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சடடத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

ரத்துபஸ்வல, வெலிவேரிய போன்ற இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் மூலம் இராணுவத்தின் நடவடிக்கைகள் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்பது நிரூபணமாகியுள்ளது என தெரிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளில் தொடர்ந்தும் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது ஏற்புடையதல்ல எனவும், இது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடுமெனவும் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டி யுள்ளது,

அத்துடன் இந்த வர்த்தமாணி அறிவிப்பானது நாட்டின் சனநாயகத்திற்கும், சட்டம் ஒழுங்கு நிலைமைக்கும் பாதகத்தையே ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளது.

## கிழக்கு நியமனங்கள்

கிழக்கு மாகாண விவசாய போதானா ஆசிரியர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை வரோதய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாய அமைச்சிலேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியனவும் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் க.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் மாகாண சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அன்வர், மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ். ஹுசைன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## படகு விபத்தில் பலி



கடந்த 03.12.2013ம் திகதி காலை 3.30 மணிக்கு திருமலை, வீரநகர் வலைத் தொழிலுக்குக் கடலுக்குச் சென்ற போது அலைகளின் தாக்குதலில் படகு கவிழ்ந்தது. படகில் பயணித்த ச.மொகன், ஜஸ்டின் மற்றும் ம. மோகன் ஆகிய மூவரும் கடலுக்குள் தூக்கியெறியப்பட்டனர்.

இவ்விபத்தில் மூன்று குழந்தைகளின் தந்தையான அழகுராசா ஜஸ்டின் மூச்சுத் திணறிப் பலியாகியுள்ளார். கடலடி நீரோட்டத்தில் மாட்டுப்பட்டதாலேயே இவர் பலியாகியுள்ளார்.

## அகில இலங்கை விருது - முகம்மது மில்ஹான்



(எம்.ரீ.எம்.பர்ஹான்)

நிர்மாணத்துறையில் அளவிட முடியாத உயரத்தை அளவிடும் கருவியை கண்டுபிடித்து தேசிய மட்டத்தில் முன்றாம் இடத்தை பெற்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவன் முகம்மது மில்ஹான் சாதனை படைத்துள்ளார். இன் நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோரிக்கைகளை நிராகரித்தது வெளிவிவகார அமைச்சு

பொதுநலவாயத்தை முன்னிட்டு கொழும்பை நவீன மயப்படுத்தி கொழும்பு மாநகர சபை செய்த 800 மில்லியன் ரூபா செலவை மீளளிக்கும் உத்தரவாதம் எதனையும் வழங்க வில்லை என கொழும்பு மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார். கொழும்பை அழகுபடுத்தச் செய்த செலவீனமான 800 மில்லியன் ரூபாய்களையும் வெளிவிகார அமைச்சே தரவேண்டும் என கொழும்பு மாநகர மேயர் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Sunday LEADER

## த.தே.கூ எம்பிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரனை

அரசியலமைப்புச் சட்டத்தை மீறியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மீது குற்றஞ்சாட்டியுள்ள ஆளுங்கட்சி எம்பிக்கள் அவர் மீது நம்பிக்கையில்ல பிரேரணையை முன் னெடுக்கப் போவதாக தம்முள்ளே கலந்தாலோசித்து உள்ளனர்.

Sunday OBSERVER

## மரங்களை வெட்டி EPF, ETF கட்டுக



அரச பெருந் தோட்டங்களில் வளர்ந்து கிளைப் பரப்பி நிற்கும் பாரிய மரங்களை வெட்டி விற்று அப் பெருந்தோட்டக் கம்பனிகள் செலுத்தாதுள்ள ஊழியர் சேமலாப நம்பிக்கை நிதிக் கொடுப்பன வுகளைச் செலுத்தும் அனுமதியை மந்திரிசபை வழங்கியுள்ளது.

Sunday TIMES

## தமிழ்நாட்டின் மனிதாபிமான மற்ற செயல்பாடுகள்

வடமாகாண மீன்பிடிப் பிரதேச ங்களில் நிகழ்ந்துவரும் மனிதாபி மானமற்ற அத்து மீறிய மீன்பிடி செயற் பாடுகளால் தென்னிந்திய மீனவர் மீது கடுப்பாகியுள்ள வடமாகாண மீனவர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க முனை ந்துள்ள வேளையில், வடமாகாண கடற் துறை அமைச்சரும் கடும் நடவடிக் கைகளை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றார்.

Sunday OBSERVER

## உணவுப் பொருட் பொதிகளின் அடையாளப்பட்டை



உணவுப் பொருட்களின் பொதிகளில் இடப்படும் அடையாளப் பட்டையில் எவ்விதமான தகவல்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதை பாடசாலை மாணவர்கள் வரையறுத்துள்ளனர்.

பொருட்களின் பொதிகளில் இடப்படும் பட்டிகளில் எவ்வகையான தரவுகள் இடம்பெற வேண்டும் என்ற ஆய்வை 2012ம் ஆண்டு நுகர்வோர் அதிகாரசபை கொழும்பிலுள்ள 26 பாடசாலை மாணவர்கள் ஊடாக நடாத்தியது. அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளிலிருந்து பெறுமதிவாய்ந்த தேவையான பல தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசனை அறிவித்துள்ளது.

Sunday OBSERVER

## ஈரானிய உடன்பாட்டை அவதானிக்கும் இலங்கை

அமெரிக்காவும் ஏனைய ஐந்து அதிகாரம் மிக்க உலக நாடுகளும் இணைந்து சீனாவுடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையின் சரத்துக்கள் தொடர்பான தகவல்களை இலங்கை அமெரிக்காவிடம் கோரியுள்ளது. இத் தகவலின் பேரில் மேலதிக எண்ணையை ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் வாய்ப்பேதும் இருக்குமா என்பதையே இலங்கை அவதானிப்பதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளர்.

Sunday LEADER

## அமெரிக்க தூதராக எவருமே இன்னும் முன்மொழியப்படவில்லை

இலங்கைக்கான அமெரிக்க தூதராக கடந்த ஐந்து வருடங்கள் பணியாற்றிய ஜாலிய விக்ரமசூரிய தனது பதிவிக்காலத்தின் பின் கனடாவிற்கான இலங்கைத் தூதுவராகச் செயற்படவுள்ளார். அவரது அமெரிக்கப் பதவியை நிரப்பும் புதிய தூதுவரை இலங்கை வெளிவிவகார அமைச்சு இன்னமும் பெயரிடவில்லை அவர் பதவிக்கு தற்போது நான்கு பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. அவற்றுள் பாலித ஹொகண கருணாதிலக வுமுனுகம ஆகியோரின் பெயர்களும் உள்ளதாக தெரிவருகின்றது.

Sunday TIMES

## க.பொ.த சாதாரன தரப்பரீட்சைக்கு 500/- கட்டணம்



களணிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் 500 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் எனக் கோரப்பட்டுளமை பெருங்கண்டனத்தை உருவாக்கியுள்ளது. இப் பாடசாலையில் மூன்று பிரிவுகள் உள்ளதாகவும் அப் பிரிவுகளில் இருந்து மெத்தமாக 120 பிள்ளைகள் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள தாகவும் ஆசிரியர் சங்கஅங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார். இச் செய்தி வெளியானவுடன் பெற்றோரைத் தொடர்பு கொண்ட அதிபர் இப் பங்களிப்பை பெற்றோர் தாமாகவே முன்வந்து கொடுப்பதாகக் கூறுமாறு அதிபர் வற்புறுத்தியுள்ளார்.

Sunday LEADER

## ஒரு பில்லியன் மோசடி

சுத்திரிக்கப் படாத பாம் எண்ணெயை இறக்குமதி செய்வதாக ஆவண ங்களை சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்த பாரிய 3 கம்பனிகள், சுத்திகரிக்கப்பட்ட எண்ணையை இறக்குமதி செய்து மோசடியில் ஈடுபட்டுவருவது கண்டுப்பிடிக்கப் பட்டுள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட எண்ணை இறக்குமதி செய்யப்பட்டால் மேலதிகமாக லீற்றருக்கு முப்பது ரூபாயை செலுத்த வேண்டும். இவ் வரி மிகையைத் தவிர்ப்ப தற்காகவே அந்த மூன்று கம்பனிகளும் சுத்திகரிக்கப்படாத எண்ணை இறக்குமதி செய்யப்படுவதாக ஆவணங்களை தயாரித்திருந்தாலும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணை இறக்குமதி செய்யப்படுவதை சுங்கத் திணைக்களம் கண்டு பிடித்துள்ளது.

Sunday TIMES

## 200 கண்டு பிப்புக்களை கருக்கிய தீ

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இளம் புத்தாக்குனர் கண்டு பிடிப்பு கண்காட்சியில் தீப்பற்றியது சுமார் அரைமணி நேரம்வரை கட்டுப் பாடின்றிப் பற்றிய நெருப்பினால் அழிவடைந்தன சுமார் 200 புதிய கண்டுப்புடிப்புக்கள்.

Sunday TIMES

## கைத்தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்படலாம்

இலங்கையிலுள்ள 99 வீதமான கைத்தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படும் ஆபத்தைக் கொண்டு ள்ளதாக தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் தெரிவித்துள் ளனர். உச்சப் பாதுகாப்பும் இரகசியமும் கொண்ட தகவல்களைக் கையாள்ளும் அரச உயர் அதிகாரிகள், படையதிகாரிகள் அரசியல் தலைவர்கள் போன்றோரது தொடர்புகள் கூட ஒட்டுக் கேட்கப்படலாம் என வல்லுனர்கள் வெருட்டியுள்ளனர்.



Sunday LEADER

## கடலில் அத்துமீறல் இந்தியாவிடம் சனாதிப வேண்டுகோள்

நூற்றுக் கணக்கான மீனவர்கள் இரு நாட்டு அரசுகளாலும் கைது செய்யப்பட்டுத் தடுப்பில் இடப்பட்டுள்ள நிலையில் கடலில் அத்துமீறலை தடுக்கும் மூலோபாயத்தை கண்டுப் பிடிக்கும் நடவடிக்கைகளை முன் நிலைப் படுத்த வருமாறு இந்தியாவை இலங்கை கோரியுள்ளது.

இந்தியக் கடற்படைத் தளப தியை இலங்கைச் சனாதிபதியும் மீன்வளத்துறை அமைச்சரும் கடந்த வாரம் சந்தித்த போதே இவ் வேண்டு கோளை விடுத்திருந்தனர்.

Sunday TIMES

## ஆபத்தில் உள்ள குளம்

சமநலவெவ குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையை அடைந்துள்ளது. ஏனெனில் அதன் குளக்கட்டில் பல இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு ஒழுக்கு களும் ஏற்பட்டுள்ளன. பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் மின்சாரபை ஆகியன குளம் உடைந்துவிடும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதை எச்சரித்துள்ளன.

Sunday LEADER

# - எங்களை விட உங்களுக்கே அதிகத் தொடர்புகள் -

## - பாராளுமன்றில் தலைவர் சம்பந்தர் -



"பலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பற்றி தற்போது பேசுகின்றார்கள் என நான் அறிகின்றேன். ஆனால் நேரம் மட்டுப்பாடாக இருப்பதால், அவ்வாறு பேசும் அனைவருக்கும் பதிலளிக்க முடியாதிருப்பதையிட்டு மனம் வருந்துகின்றேன். ஆனால் என்னைவிட நீங்களே விடுதலைப் புலிகளுடன் அதிகத் தொடர்புகளைக் கொண்டுள்ளீர்கள். எனக்கு கே.பி. யார் என்பது கூடத் தெரியாது. எப்போதுமே அவரை நான் சந்தித்ததில்லை. ஆனால் அவர் உங்களின் அன்பராக அல்லவா இப்போது இருக்கின்றார்"

" அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டதற்கமைய, சில காலங்களுக்கு முன் மட்டக்களப்பில் எவற்றையோ எல்லாம் செய்து முடித்ததாகக் குறிப்பிடப்பட்ட ஒருவர் இருக்கின்றார். அவர் தற்போது உங்களின் அமைச்சரவையில் அல்லவா அங்கீகாரம் பெற்ற அமைச்சராக உள்ளார். அத்துடன் உங்களுடன் தற்போது இருக்கும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரை மறந்துவிடலாமா? அவர் இம்முறை தேர்தலில் வெற்றியடையவில்லை. அவரை நீங்கள் அல்லவா வெற்றி பெறச் செய்துள்ளீர்கள். விடுதலைப் புலிகளுடன் தொடர்புறுவதற்கு எனக்கு எவ்வித தேவைகளும் இல்லை. ஆனால் உங்களுக்கு அவர்களுடன் தொடர்புகொண்டு செயலாற்ற நிறையவே தேவைகள் இருக்கின்றன " என பாதீட்டு விவாதத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் விலாவாரியாக அரசிற்கும், ஆளுங்கட்சிக் கூட்டணிக்கும் விளம்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியதாகவும் தற்போதும் விடுதலைப் புலிகளின் நோக்கத்தை நிறைவேற்றவே செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது பழி சொல்லிக் கொண்டிருந்த வேளை அவை எல்லாவற்றிற்கும் ஆணித்தரமான பதிலாக இவ்வுரை அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியக் கோரிக்கையின்படி நம்பத்தகு உள்நாட்டில் விசாரணை சாத்தியமா?

நம்பத்தகு விசாரணையொன்றை உள்நாட்டில் நடாத்தி போர்க் குற்றங்கள் நிகழ்ந்துள்ளதா? என்பதை அறிந்து கொள்ளுமாறும் அவ்வாறு நம்பகத்தகு விசாரணை செய்ய முடியாது விட்டால் சர்வதேச விசாரணை ஒன்றை 2014 மார்ச் ஜெனீவாக் கூட்டத்தொடரில் கோர வேண்டியிருக்கும் என்னும் பிரித்தானியப் பிரதமர் பொதுநலவாய மாநாட்டின் போது கூறிச் சென்றிந்தார்.

அவரது பேச்சுக்களின் பின்னணியில் சர்வதேச விசாரணையைத் தவிர்க்க வேண்டுமானால் உள்நாட்டில் நம்பத்தகு விசாரணையொன்றை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்படுவது போல் இருக்கின்றது.

சர்வதேச விசாரணையை பிரித்தானியப் பிரதமரிடம் இருந்து தவிர்க்க வேண்டுமாயின் இலங்கைக்கு இரண்டு வழிகளே இருக்கின்றன

ஒன்றில் கெமரூனுடன் நெருக்கமான தொடர்பை பேணுவது இல்ரலயேல் உள்நாட்டில் நம்பத்தகு விசாரணையொன்றை நடத்துவது கெமரூனுடன் நெருக்கமான உறவைப் பேனுவதென்பது இலங்கைக்கு இப்போதைக்கு இயலாத காரியமே.

இவ்வாறு பிரித்தானியாவுடன் இலங்கை உறவை விருத்தி செய்ய முடியாமல் இருப்பதற்கு இலங்கையின் எதேச்சதிகாரப் போக்கும், கெமரூனின் பொதுநலவாய உரையின் பின்னர் அவ் உரையின் யதார்த்தங்களை செவிமடுக்காமல் அவரைத் தனிப்பட்ட முறையில் தாக்க முனைந்த அரசியல் வாதிகளின் செயற்பாடும், அததற்கும் மேவாகச் சென்று கெமரூனையும் ஒரு புலிப்படை முகவராக்க முனைந்த சிங்களப் பேரினவாதகளின் செயற்பாடும் மட்டுமே காரணங்கள் அல்ல.

உலகப் பொருளாதாரத்தில் சீனா தவிர்க்க முடியாத ஆளுமையாகப் பலம் பெற்றுவருவதால் கடுப்படை ந்துள்ள வல்லரசு மேற்குக் பொருளாதாரங்கள் சீன- இலங்கை உறவை வெகுவாக விரும்பாமலிரு ப்பதும் சீனச் சொல்லுக்கு ஆகும் இலங்கையின் செயல்பாடுகளும் காரணம் எனலாம்.

ஏனெனில் "சீனா தொடர்பான பிரித்தானிய நடத்தையை மாற்ற வேண்டியதே எனது பயணத்தின் நோக்கம்" என பிரித்தானிய சான்சிலர் ஜோர்ஜ் ஒஸ்போன் ஒக்டோபர் 14ம் திகதி ஆற்றிய உரையொன்றிலே தெரிவித்துள்ளார்.

ஆகவே இலங்கை பிரித்தானிய அரசுடன் உறவை வளர்த்துக் கொள்வது அப்படியொன்றும் இயவான காரியமாக எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இலங்கையால் செய்யக் கூடியது நம்பகமான உள்ளக விசாரணையாகவே இருக்கலாம். நிற்க இங்குதான் நம்பகமான ஆராய வேண்டி ஏற்படுகின்றது.

"நம்பகமான" என்னும் வார்த்தைப் பதமானது இங்கு முக்கிய பெறுமதியைக் கொண்டமைக்கின்றது. நம்பகத் தன்மை கொண்ட உள்ளக விசாரணையை நடாத்த இலங்கை அரசு முயற்சிக்கிகுமானால் அதற்கு முதற் தடையாக இருக்கப் போவது யார் மீது? விசாரணை என்பதே.

இதற்கு விடை தெளிவா

## மார்ச் 2014ல் ஜெனீவா

இருக்கின்றது. போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட தரப்புக்கள் இரண்டே அவை படைத்தரப்பும், புலிகள் தரப்புமே இங்கு புலிகள் தரப்பானது முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ள அரசு எஞ்சிய புலிகளில் முக்கியமானவர் களை தடுத்து வைத்து விசாரணை செய்து நீதிமன்றிலும் நிறுத்தி வருகி ன்றது.

எனவே இங்கு நம்பத்தகு விசார ண்ணையை புலிகள் மீது அரசே நடாத்தி வருகின்றது. எனில் நம்பத்தகு விசாரணை சுட்டி நிற்கும் மற்றைய தரப்பு எது? அது படைத்தரப்பே.

படைத்தரப்பின் மீது நம்பத்தகு விசாரணை முடுக்கி விடப்பட்டால் அவ் விசாரணை முப்படைக் கட்டமைப்பின் ஊடாக கீழிலிருந்து மேல்நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கும் அவ்வாறு பயணித்தால் முப்படைத்தளபதியான சனாதிபதியையும் பாதுகாப்புச் செயலாளரான சனாதிபதியின் சகோதரரையும் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவ் விசாரணை குற்றவாளி கருவாக்க முற்படலாம்.

அடுத்த நம்பத்தகு உள்ளக விசாரணைக்குச் சுயாதீனமான சட்டக் கட்டமைப்பு இலங்கையில் எஞ்சிக் கிடக்கின்றதா? என்பதை சர்வதேச சமூகம் நிரூபிக்க முடியாமல் இருக்கின்றதா? என்பதை சர்வதேச சமூகம் நிரூபிக்க முடியாமல் இருக்கின்றது.

பிரதம நீதியரசின் பதவிப் பறிப்பும், புதிய நியமனமும் இன்றுவரை சர்ச்சைக்கு உரியதாக இருப்பதே இதற்கு மிகப் பெரும் காரணம் ஆகும். எனவே சுயாதீன நீதி முறைமை தொடர்பாக எழுந்துள்ள முரண்பாடுகளால் உள்ளக விசாரணையின் உண்மைத் தன்மை கேள்விக்குறியாகப் போய்விடுகிறது.

அடுத்து உள்ளக விசாரணை தொடர்பாகவுள்ள பிரதான அரசியல் காரணியொன்றை இங்கு கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே அது இதயசுத்தியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்ட வேண்டிய எந்த நடவடிக்கையையும் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடவில்லை என்பதே வரலாறு எனவே ஆளுங்கட்சிக் கூட்டணி உள்ளக விசாரணையை எதிர்க்கும் போது விசாரணையை ஆதரிக்கும் எதிர்க்கட்சி தப்பித் தவறியேனும் உள்ளக விசாரணையை ஆளுங்கட்சி ஆதரித்தால் நாட்டையும் இராணுவத்தையும் காட்டிக் கொடுத்து விட்டதாக எதிர்க்கட்சி தனக்கான அரசியல் இலாபத்தை ஈட்டவல்லவா முற்படும். எனவே தனது வாக்கு வங்கியை மீளச் சீராக்கிக் கொள்ள கிடைபக்கும் அற்புதமான வாய்ப்பாக இதனை எதிர்க்கட்சி பயன்படுத்திக் கொள்ளும்.

அடுத்து அடிப்டைச் சிங்கள மதவாதக் கட்சிகளும் மிதவாத முஸ்லிம் கட்சியும் உள்ளக விசாரணையை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை அடிப்டைச் சிங்கள மதவாதக் கட்சிகள் மற்றும் அமைப்புக்களான பொதுபல சேன, ஜாதிக ஹெல உறுமய, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை எவ்வகையான விசாரணைகளையும் ஏற்கப்போவதில்லை. இவ் அமைப்புக்கள் அரசிக் கைக்கூலிகளாகச் செயற்பட்டாலும் அடிப்படை மதவாதம் மற்றும் சிங்கள பேரிகவாதம் தொடர்பாக எவ்விதமான விட்டுக்கொடுப்புக்களையோ அல்லது நியாயத் தன்மை கொண்ட பார்வைகளையோ அவை கொண்டிருப்பதில்லை எனவே சிங்களப் படையினர் மீது மேற்கொள்ளப்படும் எவ்விதமான விசாரணைகளையும் இவ்வமைப்புக்கள் மதம், மற்றும் மொழி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் கடுமையாக எதிர்க்கும்.

அடுத்து மிதவாத முஸ்லிம் கட்சிகள் கூட உள்ளக விசாரணைகளை எதிர்க்கும் பண்புடன் இருப்பதையே காணலாம். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது அரச படையுடன் இணைந்துள்ள முஸ்லிம்க ளுக்கு எதிராகவும் இவ் விசாரணைகள் திரும்பிவிடும் என்ற பயம். இரண்டாவது உள்ளக விசாரணைப் பொறிமுறையில் இனக்கரு வறுப்பு தமிழருக்கு எதிராக நிகழ்த்தப் பட்டதாக ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வெளியாகுமானால் அத் தகவல் நீண்டகாலமொன்றில் தமிழருக்கான சுயாட்சியை வழங்கும் ஓர் அடிப்டைக் கட்டுமானமாக அமைந்துவிடும் வடக்கு கிழக்கில் தமிழருக்கு சுயாட்சி வழங்கப்படுவது முஸ்லிம்களுக்கு ஒன்றும் உவப்பான விடயமாக இருக்கப் போவதில்லை. இன்றைய நிலையில் வடக்கு தமிழருக்கு என்றும் கிழக்கு முஸ்லிம்களுக்கு என்றும் நிர்வாக ரீதியாக பிரிக்கப்கட்டுக் கிடக்கின்றது. கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம்களே ஆட்சிய மைத்துள்ளனர். இதனால் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சியை முஸ்லிம்கள் விரும்பப் போவதில்லை அதனாலேயே அவர்கள் உள்ளக விசாரணைக்கு ஆதரவு அளிக்காமல் இருப்பர்.

மேற்போந்த காரணிகளால் நம்பத்தகு உள்ளக விசாரணை எனபது எப்போதுமே இலங்கை அரசிற்கு சாத்தியமாய் இருக்கப் போவதில்லை ஒன்றில் அவ்விசாரணை "நம்பத்தகு" என்ற வார்த்தை அகற்றப்பட்ட சாதாரண, அரச ஆணைக்குழுக்களின் விசாரணையாக அமையலாம். அல்லது "நம்பத்தகு சர்வதேச" விசாரணையாக மட்டுமே அமையலாம்.

**மாயன்**

# ஜெயபாலன் கைது அனைவருக்குமான செய்தி..



தொடர்ச்சி........

இதற்குள் இருக்கும் அரசியல் உள்நோக்கமும், அரசியல் வழிகாட்டலும் இருந்திருக்கிறது என்று கருத முடிகிறது. 10 வருடங்களின் பின்னர் சென்ற வருடம் இலங்கை சென்றிருந்த போது நான் கலந்து கொண்ட சில கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் குறித்த செய்தி, புகைப்படங்களை கண்ட குடிவரவு திணைக்களத்தில் இப்போது பணியாற்றும் என் நண்பர் என்னை உரிமையுடன் கடிந்து கொண்டார்.

உனக்கு இங்கு திரும்பவும் வந்து போகும் உத்தேசமில்லை என்றால் இப்படி நீ செய்துகொள். இல்லயேல் நல்லபிள்ளையாக வந்த இடத்துக்கு திரும்பிவிடு என்றார். இன்னமும் எனக்கு தெரிந்த பல புகலிட அரசியல் செயற்பாட்டாளர்கள் நல்ல பிள்ளைகளாகவே நாடு சென்று திரும்புவதையும் காணக் கூடியதாகவே இருக்கிறது.

உல்லாசப் பயண விசாவில் வந்தவர் உல்லாச பிராணியாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும் வேறு எதுவித அரசியல் கருத்தையும் வெளியிட உரிமையற்றவர் என்கிற இந்த விதிகள் இதற்கு முன்னர் இருக்கவில்லையா. இருக்கின்ற விதிகளை மேலும் இருக்குகின்ற நடவடிக்கை மகிந்த கொடுங்கோண்மை அரசில் தான் வரலாற்றில் கடுமையாக பின்பற்றத் தொடங்கப்பட்டிருக்கிறது.

இதற்கான பரீட்சையை அவர்கள் சென்றவருடம் முன்னிலை சோஷலிச கட்சியின் தலைவர் குமார் குணரத்தினத்திடமிருந்து தொடங்கினார்கள். கட்சியின் முதலாவது காங்கிரஸ் கூட்டம் முழு அளவில் ஏற்பாடாகி இருந்த நிலையில், கூடத்திற்கு முதல் நாள் அவ்ரை அதில் கலந்துகொள்ள முடியாதபடி அவரைக் கடத்தியது அரசாங்கம்.

இறுதியில் பாதுகாப்பு செயலாளர் அவர் வீசா காலாவதியாகியும் இருந்தார் என்பதை சாட்டாக வைத்து நாட்டை வெளியேற்றும் நிலைக்கு தள்ளினர். அரசாங்கத்துக்கு எதிராக வேகமாக வளர்ந்து வந்த அந்த கட்சியை முலையிலேயே கிள்ளியெறிய முற்பட்டனர்.

அரசியல் பழிவாங்களையும் கடும் எச்சரிக்கைகளையும் இப்படியான நடவடிக்கைகளால், எதிர் கருத்துள்ள அனைத்து தரப்பினர்க்ளுக்கும் செய்தார்கள்.

அடுத்ததாக தமிழ் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்படிருந்த தோழர் நா.சண்முகதாசனின் 20வது நினைவு தினத்தை முன்னிட்டு தோழர் அ.மார்க்ஸ் உரையாற்ற அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கு புகுந்த குடிவரவு குடியகல்வு திணைக்களத்தை சேர்ந்தவர்கள், உல்லாச பிரயாண விசாவில் வந்த அவருக்கு அங்கு பேச்சாளராக கலந்துகொள்ள சட்டப்படி உரிமையில்லை என்று அவரை தடுத்துநிறுத்தி எச்சரித்து சென்றனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் கலந்துகொண்ட IFJ - International Federation of Journalists தலைவி ஜாக்குலின் பார்க் மற்றும் ஜென்னி வோர்திங்டன் ஆகியோர் அக்கூட்டத்தில் புகுந்த புலனாய்வுப்பிரிவினர் மற்றும் குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நாடு கடத்தப்பட்டார்கள்.

இந்த மாத முற்பகுதியில் நிகழ்ந்த பொதுநலவாய மாநாட்டின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து பசுமை கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜான் லொக்கி மற்றும் அக்கட்சியை சேர்ந்த ரியொன்னன் ஆகியோர் வந்திருந்தார்கள். வடக்கில் நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளில் பங்கெடுத்துக்கொண்டார்கள் என்கிற குற்றசாட்டின் பேரில் விசா நிபந்தனை மீறல் என்கிற குற்றச்சாட்டில் நாடு

**என். சரவணன்**

(நன்றி- குளோபல் தமிழ் செய்திகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# மடைதிறந்த வெள்ளமாக 'மடை'

## கிராமியக் கலைப் பெருவிழா

இக்கலைவிழாவில் இக்களரி பெரும் எடுப்பைக்காட்டியது. அனைத்துக் கலைஞர்க்ளும் இதனைப் பார்த்து வியந்ததோடு அதன் அழகைப் போற்றினர். பப்பிரவாகன் கூத்து, கோவலன் கூத்து, கிராமியப் பாடல்கள் போன்றன இதில் ஆற்றுகை செய்யப்பட்டன.

அந்த வேளையில் பல் வகைமைக் கலைஞர்களும் சுற்றியிருந்து பார்த்தும், கேட்டும் ரசித்துக் கொண்டாடியதோடு பல வழிகளில் அபிப்பிராயங்களையும் கூறி ஒருவருக்கு ஒருவர் தமது உறவின்ன ஆழப்படுத்தினர்.

கூத்தின் ஆட்டக் கோலங்கள், பாடல் பாடும் முறை, தரு எடுத்தல், அதில் வரும் தாளம், சுற்றியாடுதல் போன்றவை பற்றியும் மத்தள அடியின் வீச்சு, அதன் அர்த்தப்பாடு பற்றியும் விமர்சனப்பாங்குடன் அருகில் இருந்தவர்களுடன் உரையாடியதோடு, தமது பிரதேச கூத்துக்களுடன் ஒப்பிடும் தன்மையையும், அந்த வேளையில் ஒத்துப் போகும் அல்லது வேறுபடும் நிலைமையினையும் கூறிக் கொண்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

அதே நேரம் தமது ஊரில் கூத்துப் பழகும்போது தாம் எவ்வாறு பழகினோம் என்பதனையும் பகிர்ந்து கொண்டனர். சுற்றியிருந்து பார்த்து மகிழ்ந்த கூத்தர்கள் தாமும் கூத்தாடுவதற்கு விரும்புவதாகவும், அனுமதி கிடைக்குமா? எனவும் வினவினர்.

கூத்தை உடலிலும் உதிரத்திலும்



இயல்பாகவே கொண்டிருக்கும் பாரம்பரியக் கலைஞர்கள் இவ்வாறு ஒன்று கூடும்போது இது பற்றி உரையாடத் தோன்றுவது இயல்பாகும். இது களரி எனும் ஆற்றுகை வெளி கொடுத்த அற்புதமான களமாகும்.

இந்நிகழ்வில் சிறுவர்கள் சுற்றியிருந்து பார்த்து மகிழ்ந்ததோடு அருகில் இருந்தவர்களிடம் சுரண்டிச் சுரண்டி விளக்கம் கேட்டனர். ஆடி முடிய வெளியில் வந்த கூத்தரை அணிந்திருந்த உடையைத் தொட்டுப்பார்த்தனர். சில சிறுவர்கள் பாடல்களைப் பாடியும் காட்டினர்.

பல்வகைமைகள் ஒன்று கூடி ஆற்றுகை செய்தும், மகிழ்ந்தும் உரையாடிய வெளியானது மிகவும் காத்திரமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருந்ததினை அக்கலைஞர்களின் அறிக்கை மூலம் முன்மொழியப்பட்டது. இது இக் களரிக்குக் கிடைத்த சான்றுதழாகும்.

மடை நிகழ்வின் முடிவு வைபவமும் களரியைத் தளமாகக் கொண்டே திட்டமிடப்பட்டு நடைபெற்றமையானது களரியின் பெருமையை மேலும் பரவலாக்கியது. எமது கண் முன்னால் பிரமாண்டத்தை



ஏற்படுத்தி கட்புலத்தைப் பூர்த்தி செய்த முக்கியமான ஒரு காட்சிக் கட்டிடமாகவும் அவ்வேளையில் களரி அமைந்தது.

நவீன நாடக மேடை கொடுக்காத சுகமான வாழ்வையும், மனித உறவாடலையும், கலையின் அனுபவிப்பையும் இக்களரி 'மடை' 2013 நிகழ்வில் பல்வகைமைக் கலைஞர்களுக்கும் கொடுத்திருக்கும் என்பது கண்கூடு.

இதனைக் கருத்திற் கொண்டே மாணவர்களின் கல்வித் தேவைக்காக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தலைவர் கலாநிதி சி.ஜெயசங்கரின் எண்ணக்கருவிற்கு ஏற்பவும் அவரது திட்டமிடல் வழிகாட்டலுடன் சிறப்பான 'நடமாடும் களரி' (Mobile Kalari) வடிவமைக் கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அக் களரியின் கீழ் விட்டம் இரும்பால் தயாரிக்கப்பட்டு உட்பகுதி பலகையாலும் ஆனது. அரங்கேற்றுக் களரி போன்றே இதன் வடிவம் காணப்படும். நுண்கலைத்துறையில் உள்ள காட்சிப்படுத்தல் தொகுதியில் (Display Packaged) இக்களரியும் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்த நடமாடும் களரி அம்பாரையில் நடைபெற்ற "தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியில் - 2013" நிகழ்வில் முதன் முதலாக அமைத்து காட்சிப்படுத்தப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரது வரவேற்பையும் பெற்றது. எமது பாரம்பரிய தனித்துவ அடையாளமாகவும், சமூக மையக் கட்டுமானமாகவும் விளங்கும் களரி முழுச் சமூகத்திற்குரிய சேர்ந்து வாழ்தலுக்கான வெளியை எம் கண் முன்னால் இயல்பாகவே தருகின்றது.

**விரிவுரையாளர்**
**திரு சு.சந்திரகுமார்.**

முற்றும்.

---

# எத்தனை காலம் தான்......?

இராகம பிரதேசம் கம்பஹா மாவட்டத்தை சார்ந்தது. அங்கு நிதமும் மக்களின் நடமாட்டம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். அதற்கு காரணம் அங்குள்ள பிரசித்தமான தொடருந்து நிலையமும், அரசினர் பொது வைத்தியசாலையுமாகும். அப்பொது வைத்தியசாலையில்

அங்கே பணிபுரியும் ஊழியர்களிடையில் நான்கு நண்பர்கள் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களாக காணப்பட்டார்கள். அவர்கள் உயர் பதவிகளை வகிப்பவர்களல்ல. சாதாரண சிற்றூழியர், இருப்பினும் உயர் உத்தியோகத்தர்கள், வைத்திய நிபுணர்கள், மற்றும் பணியாளர்கள் ஆகியோர் அவர்கள் மேல் மிக அன்பாக இருந்தார்கள்.

அதற்கு காரணம் அங்கு வரும் நோயாளர்களை கவனிப்பதில் அவர்கள் நான்கு பேரும் காட்டும் அக்கறையே அவர்கள் மேலும் வித்தியாசமானவர்களாக அங்கு காணப்பட்டார்கள். இன்று சிலர் சம்பளத்திற்காகவே அரச துறையிலும், தனியார் துறையிலும் வேலை செய்து வருவதை நாம் அறியாமலல்ல. கடமையை ஒழுஙடகாக செய்யாமலே சம்பளத்தினத்தை கணக்கீட்டுக் கொண்டிருப்பவர்களையும் நாம் அறிவோம்.

வைத்தியசாலையிலுள்ளவர்களால் அவர்கள் என்றும் போற்றி பாராட்டப்பட்டாலும் அவர்களிடம் விரும்பத்தகாத தீய குணமும் இருந்தது. அவர்கள் ஒன்றாக கூடும் இடம் அந்த வைத்தியாசாலையில் உபயோகமல்லாத வாகனங்கள் தரித்து வைக்கப்பட்டுள்ள களஞ்சியசாலையே.

அந்த நண்பர்கள் அந்த இடத்தை தேர்தெடுத்தமைக்கு காரணம் யாருக்கும் தெரியாவண்ணம் ஒளித்திருந்து மறைவாக மது அருந்த அது மிகவும் பொருத்தமாக இருந்ததே களஞ்சிய சாலையில் நிறுத்துவைக்கப்பட்டுள்ள பழைய அம்புலன்ஸ் மிக சௌகரியமாக இருந்து வந்தது.

அவசரவிகிச்சை, சத்திரசிகிச்சை, விபத்துக்கள், அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கு உட்படும் வெளி நோயாளிகளை இரவு வேளைகளில் கவனிப்பதில் அவர்கள் மருத்துவ அதிகாரிகலுக்கு மிகவும் ஒத்தாசையாக இருப்பார்கள். கடமையை என்றுமே அவர்கள் புறக்கணிப்பதில்லை. ஓய்வு நேரத்தில் மாத்திரமே அந்த பழைய அம்புலன்ஸ் வாகனத்திற்குள் முடங்கிவிடுவார்கள். அவர்கள் மிக சுறு சுறுப்பாக இயங்குவதற்கு காரணம் மதுவின் மகிமையே

அவர்கள் அனைவரும் திருமணமானவர்கள். அனேகமாக வயது சுமார் 35 மதிக்கத்தக்கவர்கள் ஒருவர் மாத்திரமே 40 வயதைக் கொண்டவராக இருந்தார். சகலருக்கும் குழந்தைகள் உள்ளனர். ஆகக் கூடிய வயதைக் கொண்டவரே அந்த நண்பர்களின் குழுத் தலைவராக செயல்பட்டுவந்தார்.

அனைத்து மது விருந்துபசாரங்கலும் குறித்த தலைவரின் தலைமையிலும், வழிகாட்டலிலும், அங்கு இடம் பெற்று வருவது மிக குறிப்பிடத்தக்கது. அவர்கள் எப்படித்தான் குடித்து கும்மாளம் போட்டாலும் சம்பளத்தை மாதா மாதம் தம் மனைவிமார்களின் கரங்களில் குறையாமல் சேர்த்து விடுவார்கள்.

அவர்களிடம் உள்ள நற்பண்புகளில் அதுவும் ஒன்றாகும். சகலரினதும் குடும்பங்களிலிலும் பெற்றோர், மாமா மாமிமார், சகோதரர்கள், டின்றெல்லாம் உறவுகள் குவிந்து இருப்பதார் அவர்களின் குழந்தைக்ளை கவனிப்பதில் அங்கு எவ்வித சிக்கல்கலும் தோன்றவில்லை.

சிலரின் மனைவிமார் இராகம பகுதியிலுள்ள ஆடைத் தொழில் சாலைகளில் பணி புரிகிறார்கள். அதனால் வீட்டில் குதுகலமாக நாளை கழிக்க கூடிய சூழல் நண்பர்கலுக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் இருசாராரும் தொழிலின் நிமித்தம் வீட்டிலிருந்து வெளியில் செல்வதே.

உலகில் எந்தவொரு அமைப்புக்கும் யாப்புவிதி என்பது முக்கியமானது அவர்களிடமும் அவ்விதமான யாப்பொன்று இருந்தது. அதன் அடிப்படையிலே அவர்களின் நாளாந்த மது உபசார நடவடிக்கைகளும் ஒழுங்காக இடம் பெற்று வந்தன.

ஒவ்வொரு நாளும் குறித்த உபசார செயலை நண்பர்கள் குழுவின் ஒருவர் பொறுப் பேற்க வேண்டும். சுழற்சி முறையில் செலவை பொறுப் பேற்பவர் நாளொன்றுக்கு ரூபா 1000.:-க்கு குறையாமல் செலவு செய்ய வேண்டும். விரும்பினால் மேலதிகமாகவும் செலவு செய்யலாம்.

எந்தவொரு நிலையிலும் தகுந்த ஏற்றுக் கொள்ளகூடிய, காரணங்கள் இன்றி குறித்த மது உபசாரத்தை இரத்துச் செய்யவோ அல்லது பிற்போடவோ முடியாது குறிப்பிட்டவருக்கு யாதும் பொருளாதார நெருக்கடிகள் இருப்பின் குழுவின் ஏனைய நண்பர்களிடம் இருந்து கடன் அடிப்படையில் வட்டியில்லா பணத்தை பெறமுடியும்.

வைத்தியசாலையில் பணம் சேகரிப்பது என்பது கஷ்ரமான காரியமல்ல ஆனால் பணம் மீளச் செலுத்துவதில் காலம் தாழ்த்தினால் அதற்கான வட்டிப்பணத்தையும் சேர்த்து செலுத்த நேரிடும். இதுதான் அவர்களுடைய யாப்பின் விதிமுறைகள். இவை எச்சந்தர்ப்பதிலும் மீறப்படாது. நாளாந்தம் மது விருந்துபசாரம் அங்கு இடம் பெற்று வந்தமை மிக குறிப்பிடத்தக்கது.

குழுவின் தலைவர் நல்ல அனுபவசாலியாகவும் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும், போஷகராகவும் தனது சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் அக்குழுவை வழிநடத்தினாலும் தனது சொந்த குடும்பத்தை வழி நடத்த அவர் தவறிவிட்டார்.

குழந்தைகளின் எதிர்காலத்தை முன்னிட்டு தனது குடும்பத்திற்கு புறம்பான வீடொன்றை நிர்மாணிப்பதே அவரின் பிரதான நோக்கமாக இருந்தது. அதனால் மாதா மாதாம் தனது கணவரின் நடவடிக்கைகளை கவனித்து தெரியப்படுத்துவதற்கு அவரின் நண்பி ஒருவர் உதவியாக இருந்தார்.

ஒரு நாள் அந்த நண்பியிடம் இருந்து வந்த செய்தியால் அவர் உடனடியாக நாடு திரும்பினால் அவரது உழைப்பு முழுவதும் விழலுக்கு இறைந்த நீர் மாதிரியானதையிட்டு கவலைப்பட்டார்.

மேலும் அவர் வெளிநாடு சென்ற நோக்கம் அலகு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. கணவர் முழுப்பணத்தையும் நண்பர்களுடன் சேர்ந்து குடித்து கும்மாளம் அடித்து வீண் விரயம் செய்ததுமல்லாமல் பெரும் கடன் காரராகவும் மாறி இருந்தார்.

அவர் தனது குழந்தை இறந்து விட்டதாக போலி மரணச் சான்றிதலை சமர்ப்பித்து வங்கியில் மனைவியால் வைப்பு செய்யப்பட்ட பணம் அத்தனையையும் கையாடி இருந்தார் வைத்திய சாலையில் பெறுமதிமிக்க பொருட்களை திருடியதால் அவரின் சம்பளத்தில் பல கழிவுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க அவரால் முடியாமல் போய்விட்டது.

அன்று தனது நண்பர்களிடம் சேர்ந்து வயிறு நிறைய குடித்துவிட்டு இராகம தொடரூந்து நிலையத்தின் 3வது மேடையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தொடரூந்தின் கீழ்ப்பகுதிச் சில்லுக்கு அருகாமையில் தலையை வைத்து நன்றாகருரட்டை விட்டு தூங்கினார். அது தான் அவரின் கடைசி தூக்கமாக இருந்தது.

நிறுத்த வைக்கப்பட்டிருந்த தொடரூந்து தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்ததை அடுத்து அவரின் தலை வேறாகவும், உடல் வேறாகவும் உயிர் பிரிந்தது. அவரது இறுதிப்பயண நடவடிக்கைகளை அவரின் நண்பர்கள் கண்ணீர்மல்க மேற்கொண்டனர்.

அவரின் மரணம் தற்கொலை என்பதால் காப்புறுதிப்பணம் கூட மனைவியன் கைகளுக்கு கிட்டவில்லை. கடன் கழிவுகள் அதிகமாக இருந்ததால் ஓய்வுதியத்திற்கு முன்னர் செலுத்தப்படும் மொத்த தொகைப்பணமும் மிக குறைவாகவே மனைவிக்கு செலுத்தப்பட்டது.

## ...நாட்டு நடப்பு...

தற்பொழுது மனைவி இறந்த கணவரின் பேரில் ஓய்வுதியத்தை பெற்றாலும் இன்றைய வாழ்க்கை செலவுக்கு அவரால் முகம் கொடுக்க முடியாதென்பதால் இராகம பாலர் பாடசாலையொன்றில் உதவி ஆசிரியையாக கடமையாற்றுகிறார். இராகமே வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியே அந்த நியமனத்தை பெற்றுக்கொடுக்க உதவிபுரிந்தார்.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உறவுகள்

தாயம்மாள் தன் கணவனிடம், சர்க்கரை கார்டு எங்கே? அதோ அந்த இடத்தில்தான் வைச்சேன்! எடுத்த பொருளை எடுத்த இடத்திலே வைக்கறதில்ல! சும்மா கத்தாதே, 'ரூபாய் எடுத்துட்டு வா! இதுக்கு மட்டும் குறைச்சல் இல்ல தாயம்மாள் சர்க்கரை கார்டை தேடி எடுத்து வந்தாள்.

இன்னைக்கு பிரேமாவை ஸ்கூலுக்கு போக வேணாம்னுட்டேன். ஏ... அது படிக்கறபுள்ள! நீ சும்மா இருக்கிறய... இன்னைக்குத்தான் நமக்கு ஆடு குடுக்கறாங்களே! ஆமா... ஆமா நீயும் ஆடு மேய்ச்சுட்டாலும்! நீதான் மேய்ச்சு... அதை சந்தையாக்கு பாக்கலாம்!

எனக்கு கிடக்குர ஆயிரம் வேலைக்கும் இந்த வக்கனைச் சொல்லுக்கு குறைச்சல் இல்ல. நீயோ வேலைக்கு சரியா போறதில்ல, அதுக் குள்ள இதையெல்லாம் பேச வந்துட்டே உன்னோட பேச முடியாது.

தெரியுதுல்ல சும்மா கம்முனு இரு!

இந்த சொல்லாடல்களைக் கேட்டுக் கொண்டே வந்தான் முருகு. சொல்வழக்காறு பற்றி ஆய்வு மேற்கொள்ள அந்த ஊருக்கு வந்திருந்தான்.

அம்மா! நா இந்த ஊர்த் தலைவரை சந்திக்கணும்

தாயம்மாள், ஓ வெளியூர்.... காரவுகளா! இதோ வடக்கால போயி மேக்கால திரும்பினா ஒரு பெரிய ஊடு வரும் அதுதான்...

தலைவ'ருடு

சரிம்மா... நன்றி வர்றேன்.

ம்... போய்ட்டு வாங்க. தன் கணவனைப் பார்த்து, ம்... வெளியூரு காரவுக எதுக்கு வந்திருக்காங்கன்னு தெரியல!

நீ உன் வேலையப்பாரு... அடுத்தவங்க நாயம் நமக்கெதுக்கு என்றான் முத்துக்கருப்பன்.

ஏ... பிரேமா இங்க வா!

ஏம்மா... நா ஸ்கூலுக்கு கிளம்பறேன்!

இன்னைக்கு ஒன்னும் வேண்டாம். வா... போயி இன்னைக்கு நாலு ஆடு கொடுக்கறாங்களாம். சரசா, கார்த்திகா எல்லாரும் போறாங்க. நாமும் போய் வாங்கியாறலாம்.

போம்மா ஸ்கூலுக்கு லீவு போட்டா... டீச்சர் திட்டுவாங்க என்றாள் சிணுங்கியபடி.

நா... சொல்லிக்கறேன் நீ வா... அங்கிருந்து கிளம்பி சென்ற முருகு தலைவரைச் சந்தித்தான்.

ஓ!... முருகுவா... வாப்பா... அதோ அந்த வீட்டை ஒதுக்கியிருக்கு.. நீ எப்ப வேணுனாலும் வந்து தங்கிக்க.

அய்யா... இப்போ ஒரு பத்து நாள் இருந்திட்டு போறேன். அடுத்தமுறை வரும்பொழுது அதிக நாட்கள் தங்கவேண்டி வரும்.

ஓ!...தாராளம்மா தங்கிக்க... நீங்க இங்கேயே சாப்பிட்டுகிடலாம்.

அய்யா... நா ஓட்டல்ல சாப்புட்டுக்கிறேன். உங்களுக்கு சிரமம் கொடுக்க விருப்பமில்லை.

அட!... போப்பா இங்க ஓட்டலெல்லாம் சரியா இருக்காது. நீ இங்கேயே சாப்பிட்டுக்க.

அய்யா... நா ஊரைச் சுத்திப் பார்த்துட்டு வர்றதுக்கு நேரம்... காலம் சரியா வராது.

என்ன... இங்க தானே



சுத்தப்போற. எப்ப வந்தாலும் ராமாயி இங்க இருப்பா... அவ உனக்கு எந்த நேரமானாலும் சோறு போடுவா.

சரிங்க அய்யா... என்று கூறிவிட்டு முகத்தை கழுவிக் கொண்டு ஒரு நோட்டு, டேப் போன்றவற்றை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

இந்த ஊர் முழுவதும் இன்னைக்கு சுற்றிவிட்டு வந்துவிட்டால் நாளையிலயிருந்து வேலைய ஆரம்பிக்கலாம் என நினைத்தபடி ஊருக்குள் நடக்க ஆரம்பித்தான்.

தாயம்மா தன் மகள் பிரேமாவை அழைத்துக்கொண்டு சந்தைக்கு போய் நான்கு ஆட்டுக்குட்டிகளை வாங்கிக் கொண்டு, அவற்றில் இரண்டை பிரேமாவிடம் கொடுத்து இழுத்து வரச் சொன்னாள். அவள் இரண்டை இழுத்துக் கொண்டு வந்தாள். வீட்டிற்கு வந்ததும் அவற்றைக் கட்டிப் போட்டு தீனி வைத்தாள்.

இவற்றையெல்லாம் பார்த்தபடி முருகு நின்று கொண்டிருந்தான்.
தாயம்மா, என்ன வெளியூரு ராசா தலைவரைப் பாத்தாச்சா?
ம்... பாத்துட்டேன் ஏது ஆடுக?
அதுதான்... கவர்மென்ட்ல கொடுத்த விலையில்லா ஆடுக!

யாரு இது?... உங்க பொண்ணா?

ஆமா... ஆட்டைப் புடிச்சாற அவளும் வேணும்ல!

படிக்கற புள்ளைய...

ஒருநாள் படிக்காட்டி ஒன்னும் ஆகிடாது தம்பி.

இந்த ஆட்டுக்காரங்க வயிறு நிறைய தண்ணியை குடுத்து நல்லா குண்டா இருக்கற மாதிரி செஞ்சு விக்கறாங்க. இது வேற தீனி திங்க மாட்டேங்குது என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் போனாள்.

முருகு சிரித்தபடி நடக்கலானான். அந்த ஊரில் 10 நபர்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரே ம்மே... ம்மே.. ம்மே... என்னும் ஒலிதான் எங்கும் கேட்டது. ஒரு சிலருக்கு தங்கள் ஆடுகள் கத்தவில்லையே என்கிற கவலையில், என்ன நாலுல்ல 2 நல்லா கத்துது மத்த ரெண்டும் கத்தல.

அதுவா அதுதான் வயிறு முட்ட தண்ணி குடுத்திருப்பாங்க. அது இன்னும் கொஞ்ச நேரத்துல கத்தும். எல்லாருக்கும் ஒரு கவலைன்னா உனக்கு ஒண்ணு.

தாயம்மா வீட்டிற்கு அருகில் ஒரு வயதான பாட்டியம்மா குடியிருந்தார். அவருக்கு தனக்கு கொடுக்கிலைன்னு வருத்தம்.

ஆமா... கொமரிங்களுக்குத்தான் கொடுப்பாங்களாம். எனக்கெல்லாம் கொடுக்க மாட்டாங்களாம். ஏ என்னைப் பாத்தா ஆடு மாடு மேய்கிறமாதிரி

தெரியலையா?... நா... என் வயசுல எத்தனை ஆடுக மேய்ச்சிருப்பேன் என்னமோ சொல்றாங்க. நா கிழவியாயிட்டேன்னு என்று அந்த வீதிக்கே கேட்கும்படி கத்திப் பேச அந்த வீதியே சிரித்தது.

இரண்டு நாட்கள் கழிந்தது. முருகு சொல் வழக்காறு பற்றி ஆய்வை மேற்கொள்ள அந்த ஊரில் உள்ள வயதானவர்களைக் கண்டு பேச ஒவ்வொரு வீதியாகச் சென்று வரும்போது ஒரு பெரியவரிடம் சென்று பல்வேறு சொற்களைச் சொல்லி வழக்காறு பற்றி விளக்கம் கேட்டான்.

ஏன் தம்பி!... முதலில் நான் சொல்வதற்கு பதில் சொல்லு என்றார்.

ம்... கேளுங்க என்றான் முருகு

கொல்லிமலை எங்கிருக்குது?

நாமக்கல் மாவட்டத்தில்

கொல்லிமலைக்கு கொல்லிமலைன்னு ஏன் பேர் வச்சாங்க?

நான் இதைப் பற்றி சிந்திக்கவில்லையே, கொல்லிமலையில் அழகு கொட்டிக் கிடக்குதுன்னு சொல்லுவாங்க. நான் படித்தும் இருக்கேன். இயற்கை அழகு கொஞ்சும் அம்மலையில் கொல்லிப்பாவை என்னும் சாமி இருப்பதாக கூறுகிறார்கள் அதுதானோ!

அப்படியெல்லாம் இல்லை தம்பி. அந்த மலையில் சில கொடிகள் இருக்கு. அதெல்லாம் வி'ச் செடிங்க. அது மனிதனைக் கொல்லக் கூடியதாம். அதனோட தழையை தெரியாம வாயில வெச்சுட்டா உடனே கொன்னுடுமாம். அதனால் அதற்கு கொல்லிமலைன்னு பேர் வந்ததா சொல்றாங்க.

ஓ அப்படியா! என்று வியப்புடன் கேட்டுக் கொண்டு தன் காரியத்தில் ஈடுபட்டான்.

ஒரு இடத்தில் பள்ளிச் சீருடையை அணிந்து கொண்ட ஒரு சிறுமி ஆடு மேய்த்துக் கொண்டிருந்தாள்.

என்னம்மா ஸ்கூலுக்கு போகலையா? இல்லை. ஏன்? நாலு ஆடு எங்கம்மா வாங்கியாந்தது. அதை மேய்க்கிறேன். படிப்பு கெட்டுப் போகும்லஎனக்கு ஆடு மேய்க்கிறதுதான் பிடிச்சிருக்கு.

அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் நடந்தான் முருகு. இதுபோல பல காட்சிகளைக் காண நேர்ந்தது. இது என்ன கொடுமை. பள்ளிக்கு போகமாட்டேன் என்று சொல்லும் - குழந்தையை கண்டித்து பள்ளிக்கு அனுப்பாமல் இப்படி ஆடுகளை மேய்க்க விட்டிருக்கிறார்களே! என்று சிந்தித்தபடி நடந்தான்.

தன்னுடைய வேலையை முடித்து வைத்துக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தான். அப்பொழுது தாயம்மா எதிரில் வந்தாள். நான்கு ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்தாள். முருகைப் பார்த்தவுடன் என்ன அய்யா வந்த வேலையெல்லாம் முடிஞ்சுதா?

போய்கிட்டே இருக்கு.

இதுகளை வெச்சுகிட்டு வேலைக்கு போக முடியல. பகல்ல மத்தியானம் கொஞ்ச நேரம் தலை சாய்க்க முடியல. பக்கத்து வீட்டு அக்கா எல்லாரும் உட்கார்ந்து பேசுவோம். எல்லாம் போச்சு... ம்... என்ன செய்ய?

முருகு சிரித்துக்கொண்டே நடந்தான்.

மறுநாள் பார்க்கும்போது தாயம்மாவின் மகள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தாள். அவள் மட்டும் அல்ல, இன்னும் பல சிறுவர்,சிறுமியர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தனர்.

என்ன பள்ளிக்கூடத்துக்கு போகாம ஆடு மேய்ச்சுட்டு இருக்கீங்க?

நாங்க ஸ்கூலை விட்டு நின்னுட்டோம். ஆத்தாவும் அப்பாவும் சொந்தக்காரவுகவூட்டு விசேசத்துக்குப் போயிருக்காங்க. ஆடு மேய்க்க ஆளில்லாம எங்களை மேய்க்கச் சொல்லிட்டாங்க என்றனர். ஒரு சிறுவன் அழுது கொண்டிருந்தான்.

அவனிடம் முருகு கேட்டபோது அவனுக்கு பள்ளிக்கூடம் போக ஆசை என்றும், ஆனா எங்க அம்மா ஆடு மேய்க்கச் சொல்லிருச்சு என்றும் வருத்தத்துடன் கூறினான்.

ஆராய்ச்சியின் முதல் பகுதியை முடித்துவிட்டு, தன் ஊருக்குச் செல்ல பேருந்தில் ஏறி அமர்ந்தார் முருகு. அக்கிராமத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் இதேபோல் மற்ற கிராமங்களிலும் இப்படித்தானே நடக்கும் என நினைத்தபோது குலக்கல்வித் திட்டம் மீண்டும் வந்துவிடுமோ! என்று பயந்தான்.

சு. தங்கத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## அழைக்கின்றது எதிர்காலம்.

சுட்டெரிக்கும் வெயிலில்
பட்டமரத்தின்கீழ்
முக்காடிட்டபடி படிக்கின்றாய்
அவை உன் இறந்தகாலமா?
இன்றேல் நிகழ்காலமா?
அல்லது எதிர்காலமா?

முக்காலத்திலும் உன் வாழ்க்கை
மூடிய பக்கங்கள்தான்,
அவை திறக்கப்பட்டாலும்
புரியாத பக்கங்கள்தான்
அதிகமாய் இடம் பிடித்திருக்கும்
அதற்காகவா புரியாத பக்கங்களைத்
தனியாகப் புரட்டுகின்றாய்
படிப்பதற்குக்கூட
பச்சைமரம் கிடைக்கலையா?

அன்றேல்
உன் வாழ்வினைக் குறியீடாகக்
காட்டத்தான் பட்டமரத்தினை
தேர்ந்தெடுத்தாய் போலும்...

பக்கத்தில் நெருப்பு
கொழுந்து விட்டெரிகிறது
இது எதற்காக?
அக்கினியைச் சாட்சிவைத்து
உன் வாழ்க்கை
அழிக்கப்பட்டதைக் காட்டவா?
இதெல்லாம் யாருக்குப்
புரியப்போகின்றது.

உன் வாழ்க்கைப் புத்தகங்கள்
உனக்கே புரியாது பெண்ணே!
அருகேயுள்ள எரியும் தீ
அணையும் முன்பு
உன் இறந்தகால நிகழ்கால
நிஜங்களை எரித்துவிட்டு
எழுந்து வா! எழுச்சியோடு
ஏமாற்றமின்றி
எதிர்காலம் உன் வரவுக்காய்
காத்துக்கொண்டிருக்கும்.

**சுமதா கந்தசாமி**
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை.

## அழைக்கின்றது எதிர்காலம்.

கடலின் அலைகள் -என்
கால்களைத் தழுவும் போது
உன் கைகளின் ஸ்பரிசம்
உணர்கிறேன்...

காலைச் சூரியன் -என்
மேனி தழுவும் போது
உன் சுவாச ஸ்பரிசம்
உணர்கிறேன்...

காற்றின் கரங்கள் -என்
தலையை வருடும் போது
உன் அன்பின் ஸ்பரிசம்
உணர்கிறேன்...

ஆனாலும் என்ன..........
உன்னை நேரில் பார்த்து
மிக நீண்ட நாட்கள் ஆகிவிட்டன.

**எஸ். மதிவதனி**

## நிஜமான நிகழ்வொன்றுடன்

அந்தப் பெண்ணுடன் வீட்டுக்கு வந்த ஜெகதீசன் நடந்ததையெல்லாம் சொல்லி "கொஞ்ச நாட்கள் நம்முடன் இருக்கட்டும் வீட்டுப்பக்கமே போக விருப் பமில்லையாம். நாமும் கைவிட்டால் என்னாகுமோ தெரியாது" என்று சொல்லி அவளைத் தம் வீட்டில் தங்கவைக்க தாயிடம் அனுமதி பெற்றான்.

மாதம் ஒரு முறை வீடு வரும் தந்தைக்கு எப்படியோ இரு வாரங்களில் செய்தி எட்டி விட்டது. "என் விருப்பமில்லா மல் தன்னிஸ்டப்படி பெண்ணைக் கூட்டி வந்தவனை உடனடியாக வீட்டை விட்டு அனுப்பு" என்று தொலைபேசியில் மனை விக்கு தொல்லை கொடுத்தார். அப் பெண்ணின் நிலையை, அவளது இக் கட்டான சூழ்நிலையில் மகன் உதவி யதை எல்லாம் சொல்லியும் அவர் நம்பவில்லை. வேலை முடிந்து, வீட்டுக்கு வந்த மகனிடம் நிலைமையைச் சொன் னாள். மகன் எதுவும் சொல்லாமல் இருந்தான்.

ஒரு மாதம் கடந்த பின் நேரிலே வந்து பெரிய போரை நடத்திய போதுதான் ஜென்சிக்கு எல்லாம் விளங்கி வெளியேறப் போனாள். வெளியேறியவளைத் தானே அழைத்துச்சென்று, பதிவுத்திருமணம் செய்து கொண்டு, அவளது இல்லம் அழைத்துச் சென்றான். தன் வாழ்வில் இவ்வாறு திருப்பம் ஒன்று ஏற்படுமென அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

முப்பத்தைந்து வயது மதிக்கத் தக்க உயர்ந்த உள்ளமுடையவராகக் காட்சியளித்த, அந்த ஆணழகன், சோகமே உருவாகவிருந்த அவளுடன் கதைக்க முற்பட்டான். சிங்களமொழியில் பேசிய அவனுக்கு எவ்வித பதிலும் அளிக்காது, பார்வையை வேறு பக்கம் செலுத்தியதைக் கொண்டு இவள் ஒரு தமிழ்ப் பெண் என்பதை அவன் ஊகித்தான்

'நீண்ட நேரமாக நான் அவதானி த்தேன் இவ்விடத்தில் யாருக்காகக் காத்தி ருக்கீறிர்கள்?' என்று தமிழ் மொழியில் பேச்சை ஆரம்பித்தபோதுதான் அவளுக்கு உயிர் வந்தது போலிருந்தது. இவ்வாறாகக் கேட்டவன், கண்ணீடன் கதைக்க முடியாது தவித்து, தடுக்கித் தடுக்கிச் சொன்ன கதை மூலம் நிலைய றிந்து தன் வீட்டுக்கு கூட்டி வந்தான்.

முப்பது வருடமாக ஒன்றாக இருந்த பெற்றவர்களையும், உடன் பிறந்த வர்களையும் விட்டு விட்டு வந்து, இனி யாவது தன் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்ற ஆவவலுடன் கட்டு நாயக்கா விமான நிலையத்தில் அவனு க்காகக் காத்திருந்தாள். " கிறிஸ்மசுக்கு இரண்டு மாதம்தான் இருக்கு போய் வேலை செய்து, வீட்டுக்குக் காசு அனுப் பினால் சந்தோசமாக கிறிஸ்மஸ் கொண் டாடுவினம்" என்ற பல கற்பனைகளுடன் அவ்விடத்தில் இருந்தாள்.

தமிழர்களைக் காண்பதே அரிதாக இருந்தது. சிங்கள மொழி தெரியாத அவளிடம், பலர் கதைக்க முயன்று தோற்றுப் போயினர். சோதனையில் ஈடுப்பட்டிருந்த பொலிசாரின் பார்வை தன் பக்கம் ஈர்க்கபடுவதைப் போன்று அச்ச உணர்வுடன் அமர்ந்திருந் தாள். காலை ஒன்பது மணிக்கு வருவதாகக் கூறிய அவன், பிற்பகல் மூன்று மணியாகியும் வரவில்லை. வரா விட்டாலும் பரவாயில்லை... தொலைபேசி மூலம் கூட ஒரு வார்த்தை பேசவில்லை நேரம் செல்லச் செல்ல சந்தேகம், உருவானது. ஆனாலும் தான் கையெடுத்து வணங்கும் என் தெய்வம் என்னைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை அவளிடமிருந்தது.

அவனது தொலைபேசியும் இயங்க வில்லை. முன் பின் தெரியாதவனை நம்பி, யாருமற்ற அநாதைபோல் நிம்மதியற்று நின்றாள். எத்தனை இடங்களில் இருந்து திருமணம் பேசி வந்தபோதும், சீதனக் கொடுமையால் அவள் வாழ்வு சீரழிந்ததுதான் மிச்சம். காசுக்காகக் கைபிடிக்க நினைக்கும் கயவர்களுடன் தன்னால் வாழ முடியாது என்பதை உறுதியாகச் சொன்ன பின்புதான், வெளிநாடு செல்வோம் என்று முடிவெடுத்து, அறுபதாயிரம் காசையும் கொடுத்து, எல்லா ஆவணங்களுடனும் வருவதாகக் கூறிய ஏமாற்றுப் பேர்வழிக் காகக் காத்து நின்றபோதுதான், தெய்வா தீனமாக ஜென்சியை சந்தித்தான் ஜெகதீஸ்.

இன்று திருமண பந்தத்திலே இணைந்து கிறிஸ்மசை எதிர்பார்த் திருந்தனர். அந்தப் புதுமணத் தம்பதிகள். அன்பான பண்பான, பணம் நிறைந்த, பக்குவப்பட்ட கணவனை அவள் அடைவாள் என்று கனவிலும் நினைக்க வில்லை.

சீதனம் கேட்டு சின்னத்தனமாக நடக்கும் இச்சீர்கெட்ட சமுதாயத்தில், பெண்களின் வாழ்வை பிரகாசிக்கச் செய்யும் உள்ளங்களும் இருக்கத்தான் செய்கின்றன என்பதை இந்நிகழ்வுமூலம் மறுக்கமுடியாது. காசை வாங்கி ஏமாற்றிய வனும் முன்பின் தெரியாதவன்தான், அவள் வாழ்வை ஒளி மயமாக்கியவனும் முன்பின் அறியாதவன்தான்.

பணத்தைக் கொடுத்து ஏமாந்து போனவளை ஏற்கவும் ஒரு உள்ளம் இருந்தது இறைதிட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். எப்படியோ எம் சக்தியால் எம் வாழ்வை நாமமைக்க நினைத்தாலும், "உனக்காக நான் இருக்கின்றேன்" என்று உரைக்கும் உன்னத தெய்வம் பல தீமைகளூடாக எம்மை வழிநடத்தி, நன்மைகளை வழங்கும் நாயகனாகத் திகழ்கின்றார்.

வாழ்வில் வேதனைகள், விரக்திகள், சோதனைகள் வரும்போது சோர்ந்து, வாழ்வும், சாவும் ஒன்றென எண்ணி, வாழும் ஒவ்வொருவரையும் உற்று நோக்கியவாறு "உனக்காகவே நானிருக்கி றேன்" என்று கூறும் இறைவன் ஆறுதலான அவ்வார்த்தை மூலம் அன்பு காட்டி அரவணைக்கின்றார். அந்த உன்னதருக்குச் செவி கொடுத்து, வாழ்வில் வரும் சவால்களை தைரியத்துடன் எதிர்கொள்ள அருள் வேண்டுவோம்.

**ஜெயவதனி மரியதாஸ்**
தி/ புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி
திருகோணமலை

## ஜெயபாலன் கைது...

இந்த மாத முற்பகுதியில் நிகழ்ந்த பொதுநலவாய மாநாட்டின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து பசுமை கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜான்லொக்கி மற்றும் அக் கட்சியை சேர்ந்த ரியொன்னன் ஆகியோர் வந்திருந்தார்கள். வடக்கில் நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளில் பங்கெ டுத்துக்கொண்டார்கள் என்கின்ற குற்ற ச்சாட்டின் பேரில் விசா நிபந்தனை மீறல் என்கிற குற்றச்சாட்டில் நாடு கடத்தப் பட்டார்கள்.

இலங்கைக்கு உல்லாச பிரயாண விசாவில் வருபவர்கள் அரசியல் கருத்துக்களை வெளியிடு வதும், நிகழ்வுகளில் பங்கேற்று வரு வதும் புதிதாக நிகழ்ந்த ஒன்றல்ல. ஆனால் வரலாற்றிலேயே மிக மோச மான கருத்துச் சுதந்திரப் பறிப்பைச் சகல வழிகளிலும் துணிச்சலாக செய்து வரும் அரசாங்கம் இந்த வழியையும் விட்டு வைக்கவில்லை.

அதுவும் சமீபகாலமாக இந்த வடிவத்தினாலான வழிகளில் ருசி கண்டி ருக்கிறது என்றே சொல்லலாம். இதன் மூலம் அரசு அனைவருக்கும் குறியீடாக உணர்த்த முற்படும் செய்தி என்னவென் றால்... உள்நாட்டு இலங்கையர் மட்டுமல்ல வெளிநாட்டவர்களும், இலங் கையில் பிறந்து, வெளிநாட்டிலுள்ள வர்களாயினும் எங்களுக்கு எதிராக கருதுச் சொல்லி தப்பிவிட முடியாது என்பதே.

அதைத்தான் எரிக் சுல்ஹைம் மும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமல்ல இவ்வாறு நாடு கடத்தப்பட்ட வர்கள் மீளவும் விசா விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது கிடைக்காமலும் போகலாம். அவ்வாறு நிகழ்ந்தும் இருக்கிறது. பிறந்த மண்ணுக்கு மீள ப்போக முடியாததை எவர்தான் ஜீரணிப்பார். இது போன்ற ஒரு உதாரணத்தை இந்திய விடயத்தில் அவதானித்திருப்பீர்கள்.

இந்த தூதுவராலயங்கள் அனைத்தும் அந்தந்த நாடுகளில் வாழும் இலங்கையர்கள் குறித்த புலனாய்வு வேலைகளை இலங்கை அரசைவிட செய்து வந்திருக்கிறது என்பதே உண்மை. அவர்களிடம் விசா விண்ணப் பிக்கும் பலரை அழைத்து அமர்த்தி தகவல்கள் புடுங்குகின்ற வேலை களையும் அழகாக செய்து வந்திருக் கிறார்கள்.

அதன் அடிப்படையில் பலருக்கு விசா இரத்தாகியும் இருக்கின்றன. யுத்தத்தின் இறுதி மாதங்களில், ஏன் அதற்கு முன்னரும் வெளிநாடுகளில் நிகழ்ந்த பல ஆர்ப்பாட்டங்கள் பல தூதர கங்களுக்கு முன்னால் நடத்தப்பட்டது. சீனா, ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, இன்னும்... ஆனால் இந்திய தூதரகங்களுக்கு முன்னால் எதுவுமே நிகழவில்லை.

கடந்தகாலங்களில் இலங்கைக்கு செல்லமுடியாத நிலையில் இருந்த பலருக்கும் இந்தியா ஒன்றே தமது உறவுகளை சந்திக்க இருந்த வாய்ப்பாக கருதி வந்தார்கள். அவர்களுக்கு எதிராக கருத்து கூறவோ, ஆர்ப்பாட்டம் செய்வதனூடாகவோ இந்திய விசாவை இழக்க எவரும் தயாராக இருக்க வில்லை. ஆனால் இந்தியாவின் முகம் என்ன? என்பதும் இறுதி இந்தியாவில் தலையாய பணி என்ன? என்பதும் எவருக்கும் தெரியாமலிருக்கவில்லை. ஆக [illegible] ஒரு தந்திரோபாயத் [illegible] இலங்கை இன்று உரு வாக்கத் தொடங்கியுள்ளது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் இந்த கடும் விதிகளை திணித்து வருபவர்களில் முக்கியமானவர்கள் மற்ற நாட்டுப் பிரஜைகள் என்பது தான். மகிந்தவின் தம்பிகளான கோத்தபாய ராஜபக்ஸ அமெரிக்க பிரஜை. அவரின் அடுத்த தம்பி பசில் ராஜபக்ஸ அமெரிக்க கிரீன் கார்ட் உள்ளவர். யுத்தத்தை நடத்தி முடித்த சரத் பொன்சேகாவும் அமெரிக்க கிரீன் கார்ட்டைக் கொண்டவர்.

நாட்டின் அமைதிக்கு மோசமான குந்தகம் விளைவித்த சர்வதேச குற்றச் சாட்டுக்குரியவர்கள் இவர்கள். இதை எல்லாவற்றையும் உலக அரங்கில் நியாயப்படுத்த நியமிக்கப்பட்ட பாலித கோஹன்ன ஒரு அவுஸ்திரேலியபிரஜை.

இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து எந்தவொரு கருத்தையும் எவரும் எங்கும் வெளியிட முடியாத நிலையை ஏற்படுத்த சகல வழிகளிலும் அரண்களை ஏற்படுத்தி வருகிறது இலங்கை அரசு. அரசியல் செயற்பாட்டா ளர்கள், மனிதவுரிமை செயற்பாட்டா ளர்கள், கருத்துச் சுதந்திரப் போராளிகள், ஊடகவியலாளர்கள் எல்லோருக்குமான மிக மோசமான எச்சரிக்கை இது. ஜெயபாலனின் இந்த கைதும், அதனை மேலும் சர்ச்சைக்குரிய செய்தியாக்கி தொடர வைப்பதிலும் அரசின் வெற்றி இந்த இடத்தில் தான் இருக்கிறது. இந்த அச்சுறுத்தல் ஜெயபாலன் ரூபத்தில் அவர்களுக்கு இப்போது கிடைத்தி ருக்கிறது.

எனவே அணைவரும் முழு அளவில் இப் போக்குக்கு எதிராக குரல்கொடுக்க வேண்டிய முக்கிய தருணம் இது.!

**என். சரவணன்**

(நன்றி- குளோபல் தமிழ் செய்திகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## லூசியா ரீமேக்கில் சித்தார்த்



பவன் குமார் நடித்து இயக்கிய "லூசியா" படத்தை தமிழில் ரீமேக்கவுள்ளனர். சமீபத்தில் கன்னடத்தில் வெளியாகி ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்ற திரைப்படம் "லூசியா". தற்போது தமிழிலும் அதே பெயரில் ரீமேக் ஆகவுள்ளது.

சைக்காலஜிக்கல் த்ரில்லரான இப்படத்தின் தமிழ் பதிப்பில் நடிகர் சித்தார்த் கதையின் நாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். அறிமுக இயக்குனர் பிரசாத் ராமர் இயக்கவுள்ள இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கவுள்ளார். கோபி அமர்நாத்தின் ஒளிப்பதிவை லியோ ஜான் பால் எடிட் செய்யவிருக்கிறார். அடுத்த ஆண்டு ஜனவரியில் தொடங்கவிருக்கும் இப்படத்தை திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் சார்பில் சி.வி.குமார் தயாரிக்கவுள்ளார். மேலும் இப்படத்தில் நடிக்கும் இதர நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களின் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படுமாம்.

## ரிவைசிங் செல்லும் பிரியாணி



தணிக்கைக் குழு "யு ஏ" சான்றிதழ் அளித்ததால் அதை எதிர்த்து ரிவைசிங் கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது பிரியாணி திரைப்படம். வெங்கட் பிரபு இயக்கத்தில் கார்த்தி, ஹன்சிகா, பிரேம்ஜி நடித்துள்ள பிரியாணி திரைப்படம் இன்னும் இரு வாரங்களில் வெளியாகவிருக்கிறது. இந்நிலையில் படத்தைத் தணிக்கைக் குழுவுக்கு அனுப்பினர். படத்தில் சில காட்சிகள் வயது வந்தோர் மட்டும் பார்க்கும்படி உள்ளதால், படத்துக்கு யு ஏ சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.தமிழக அரசின் கேளிக்கை வரியிலிருந்து விலக்குப் பெற " யு" சான்று பெற்றிருக்க வேண்டும். ஏற்கெனவே அழகுராஜா படத்துக்கு வரிவிலக்குப் பெற்றதில் நிறைய சங்கடங்களைச் சந்தித்தது ஸ்டுடியோ க்ரீன். எனவே இந்த முறை அப்படி எதுவும் நேர்ந்துவிடக்கூடாது என்பதால் கவனமாகஇ யு சான்று பெற முயற்சி செய்து வருகிறார்கள். இதனால் படத்தை ரிவைசிங் கமிட்டிக்கு அனுப்பி,தேவைப்பட்டால் சில காட்சிகளை நீக்கிவிட்டாவது யு சான்று பெறத் தீர்மானித்துள்ளார்களாம்.

## நான்கு கெட்டப்புகளில் தனுஷ்



அனேகன் படத்தில் நான்கு விதமான கேரக்டர்களில் நடிக்கிறார் தனுஷ். மாற்றான் "படத்திற்குப் பிறகு கே.வி.ஆனந்த் இயக்கி வரும் படம்" அனேகன். ஏஜிஎஸ் நிறுவன தயாரிப்பு, ஹாரிஸ் ஜெயராஜ் இசை என பிரம்மாண்டமாக உருவாகி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு இப்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இதில் தனுஷ்க்கு ஜோடியாக மும்பை அழகி அமிரா தஸ்தர் நடிக்கிறார்.இந்தப் படத்தில் நடிக்கும் தனுஷ்குறித்து கே.வி.ஆனந்த் கூறுகையில்,இதில் தனுசிற்கு சேலஞ்சிங்கான ரோல், மாறுபட்ட நான்கு விதமான கெட்டப்புகளில் அவர் தோன்றுவார். மேலும் தனுஷின் கேரியரில் இது பேசப்படும் ஒரு படமாக அமையும் என்று கூறியுள்ளார்.

இந்தப்படத்திற்காக சில ஆகஷன் காட்சிகளை சமீபத்தில்தான் ஹைதராபாத்தில் படமாக்கி வந்திருக்கிறார்கள்.

## தூதுவர்களா? நயன்தாரா, த்ரிஷா

நட்சத்திர கிரிக்கெட் எனப்படும் சிசிஎல்லின் சென்னை ரைனோஸ் அணிக்கு விளம்பரத் தூதராக செயல் படவில்லை என்று நடிகைகள் நயன்தாராவும், த்ரிஷாவும் மறுப்பு தெரிவி த்துள்ளனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி நடிகர்கள் பங்கேற்கும் "சிசிஎல்" நட்சத்திர கிரிக்கெட் போட்டி அடுத்த வருடம் பிப்ரவரி மாதம் நடக்கிறது. இதில் தமிழ் நடிகர்களின் சென்னை ரைனேஸ் அணிக்கு நடிகைகள் நயன்தாரா, த்ரிஷா ஆகியோர் தூது வர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

த்ரிஷா ஏற்கனவே இந்த அணியில் தூதுவராக இருந்துள்ளார். நயன்தாராவை தூதுவராக நியமித்து பிறகு நீக்கி விட்டனர். இப்போது மீண்டும் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி குறித்து அவர்களிடம் கேட்டபோது மறுப்பு தெரிவித்துள்ளனர். நயன்தாரா கூறுகையில், "சிசிஎல் கிரிக்கெட் அணிக்கு தூதுவராக இருக்கும்படி கேட்டு யாரும் என்னை அணுகவில்லை. அதற்கு என்னிடம் நேரமும்



இல்லை. தற்போது எனது முழு கவனமும் நான் நடித்துக் கொண்டிருக்கும் படங்களில்தான் என்று கூறியுள்ளார். மேலும் த்ரிஷாவும் ஏற்கெனவே நான் தூதுவராக இருந்திருக்கிறேன். ஆனால் இந்த முறை யாரும் என்னை அழைக்கவில்லை என்றும் இந்த செய்தி வதந்தியானது என்று மறுப்பு தெரிவித்துள்ளார்.

## ஹன்சிகாவின் பலே சாதனை



மான்கராத்தே படத்திற்காக விதவிதமான ஜந்து பைக்குகளை ஓட்டி சாதனை படைத்திருக்கிறாராம் ஹன்சிகா. ஏ.ஆர்.முருகதாஸ் கதை, திரைக்கதையை எழுத அவரது சிஷ்யரான திருக்குமரன் இயக்கும் திரைப்படம் மான்கராத்தே. இப்படத்தில் சிவகார்த்திகேயன் ஹீரோவாக நடிக்க இவருக்கு ஜோடி போட்டுள்ளார் ஹன்சிகா. எதிர்நீச்சல் மூலம் சிவகார்த்திகேயனுக்கு சூப்பர்ஹிட் பாடல்களை தந்த அனிருத் இந்தப்படத்திற்கு இசையமைக்கிறார். இந்தப்படத்திற்காக சமீபத்தில் சிவகார்த்திகேயன், ஹன்சிகா சம்பந்தப் பட்ட சென்னைப்பாடல் ஒன்றை பைக்கை மையமாக வைத்து படமாக்கியிருக்கிறார்கள்.

இந்தப்பாடலில் 500சிசி புல்லட்டிலிருந்து பாரின் பைக் வரை விதம்விதமான ஜந்து பைக்குகளை ஓட்டி சாதனை படைத்திருக்கிறாராம் ஹன்சிகா. மேலும் பாடல் காட்சி படமாக்கப் படுவதற்கு முன்னதாக வெறும் ஒரு மணி நேரம் மட்டுமே இதற்காக பயிற்சி எடுத்துக்கொண்ட ஹன்சிகா பாடல் காட்சிகளில் பிரமாதமாக பைக் ஓட்டி அசத்தியுள்ளாராம்.



## பூங்கொத்துடன் விஸ்வரூபம் 2



காதலர் தினத்தில் ரசிகர்களுக்கு பூங்கொத்து கொடுக்க வருகிறது விஸ்வரூபம் 2 ஜில்லா, வீரம் படங்கள் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகின்றன. கோச்சடையான் படத்தை ஜனவரி 26ல் ரிலீஸ் செய்வதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்தப் படங்கள் ரிலீஸ் ஆன பிறகு விஸ்வரூபம் 2 படத்தை வெளியிடப் போகிறார்களாம். கமல், ஆண்ட்ரியா, பூஜா குமார் உட்பட பலர் நடித்திருக்கும் இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்திருக்கிறார். பாடல்களை ஜனவரி மாதத்தின் இடையிலும், படத்தை பிப்ரவரி 14 அன்று வெளியிடவும் திட்டமிட்டிருக்கிறாராம் உலகநாயகன்.

## புத்தாண்டில் புறம்போக்கு

''புறம்போக்கு'' படத்தின் பர்ஸ்ட்லுக் வருகிற புத்தாண்டு தினத்தன்று வெளியாகவுள்ளது. இயற்கை, ஈ, பேராண்மை ஆகிய படங்களின் மூலம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் திரையரங்குக்கு இழுத்துவந்து விட்டார் இயக்குனர் ஜனநாதன்.



தற்போது ஆர்யா, விஜய்சேதுபதி இருவரும் இணைந்து நடிக்க புறம்போக்கு படத்தின் மூலம் பிரம்மாண்ட கூட்டணி அமைத்திருக்கிறார். படத்தை யூடிவி மோஷன் பிக்சர்ஸுடன், ஜனநாதனின் பைனரி பிக்சர்ஸும் இணைந்து தயாரிக்கிறது. மேலும் இந்தப்படத்தின் பர்ஸ்ட் லுக் வரும் புத்தாண்டு தினத்தன்று வெளியாகவுள்ளது.

படத்தின் ஒளிப்பதிவை ஏகாம்பரம் கவனிக்க, படத்தொகுப்பு செய்ய இருக்கிறார் வி.டி.விஜயன். தற்போது படத்தின் கதாநாயகிக்கான தெரிவு நடைபெற்று வருகிறது.

## இறுதிகட்டத்தில் நிமிர்ந்து நில்

ஜெயம் ரவியின் நிமிர்ந்து நில் திரைப்படம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. சமுத்திரக்கனி இயக்கத்தில் ஜெயம் ரவி, அமலாபால ஜோடியாக நடிக்கும் திரைப்படம் நிமிர்ந்து நில். வாசன் விஷுவல் வென்சுர் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிர்காஷ் குமார் இசை அமைக்கிறார். படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இப்போது இறுதிகட்ட வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ஜெயம் ரவி நடிப்பில்ஆஸ்கர் பிலிம்ஸ் தயாரிக்கும் பூலோகம் படத்தின் வேலைகளும் இப்போது சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. இந்தப் படத்தில் நடித்து முடித்ததை தொடர்ந்து அடுத்து ஜெயம் ரவி [illegible] ராஜா இயக்கும் படத்தில் நடிக்க ஆயத்தமாகி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Xolo வின் நவீன ஸ்மார்ட் கைப்பேசி



Xolo நிறுவனமானது அன்ரோயிட் இயங்கு தளத்தில் செயற்படக்கூடியதும் இரு சிம் வசதியினையும் கொண்ட புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகப்படுத்தியுள்ளது. 4 அங்குல அளவுடைய தொடுதிரை மற்றும் 1.2GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor, பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றினைக் கொண்டதாக இக்கைப்பேசி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் 4GB சேமிப்பு நினைவகம், 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான VGA fnkuh என்பவற்றினையும் கொண்டுள்ளது. இதன் விலையானது 130 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணங்களின் போது ஸ்மார்ட் கைப்பேசிகளை சார்ஜ் செய்ய நவீன சார்ஜர் அறிமுகம்



கார்களில் பயணிக்கும்போது ஸ்மார்ட் கைப்பேசிகளை இலகுவாக சார்ஜ் செய்துகொள்ளும் வகையில் நவீன சார்ஜர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

R2-D2 எனும் இச் சார்ஜர் ஆனது USB இணைப்பானை கொண்டுள்ளதுடன் ஒரே நேரத்தில் இரு சாதனங்களை சார்ஜ் செய்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2.1 அம்பியர் மின்னோட்டத்தினை பிறப்பிக்க வல்ல இச்சாதனத்தின் பெறுமதியானது 49.99 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# விளையாட்டுப் பையன்

## மின் புத்தகங்களுக்கான Calibre மென்பொருள் பதிப்பு 1 வெளியானது

நீங்கள் கணினியில் புத்தகங்கள் வாசிப்பவராக இருந்தால், அவற்றை ஒழுங்காக தொகுத்து வைக்கவும் உங்கள் ஐபாட் போன்ற சாதனங்களோடு அவற்றை பகிர்ந்து கொள்ளவும் உதவுகின்ற இலவச சமான திறமூல மென்பொருள் Calibre ஆகும். இம்மென்பொருளின் பதிப்பு 1 அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மென்பொருள் வின்டோஸ், மக் மற்றும் லினிக்ஸ் ஆகிய மூன்று இயங்கு தளங்களிற்கும் கிடைக்கின்றது.

உங்கள் மின்புத்தகங்களை அழகாக தொகுத்து வைப்பதற்கு மட்டுமல்லாமல், அவற்றை பல பிரிவு களாக்கி வைத்துக்கொள்ளவும், மின் புத்தகங்களை ஒரு வகையிலிருந்து மற்றொரு வகைக்கு இலகுவாக மாற்றிக் கொள்ளவும் (உதாரணமாக pdf இலிருந்து epubக்கு), உங்களிடம் உள்ள எந்த கைப்பேசியோ அல்லது ரப்லற் கணினிக்கோ மின்புத்தகங்களை இலகுவாக அனுப்பிக் கொள்ளவும், இந்த புதிய பதிப்பு உதவுகின்றது.

Calibre மென்பொருள் முன்னைய பதிப்பக்களை விட தற்போத வேகமாக இயங்குவதும் குறிப்பிடத்தக்கது.

## வினைத்திறன் வாய்ந்த அதிநவீன ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகம்



சீனாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் Gionee நிறுவனமானது .மிகவும் வினைத்திறன் வாய்ந்த அதி நவீன ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்து வைத்துள்ளது. Elife E7 எனும் பெயரில் வெளியிடப்பட்ட இக்கைப்பேசியில் 16 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமெராவும், 8 மொகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை தவிர 2.5GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Qualcomm Snapdragon 800 Processor, 2.500mAh மின்கலம் ஆகியவற்றினையும் கொண்டுள்ளது.

# ஒரு கொலையின் கதை

39 (மாயன்)

**அவர் தனது கடையில் கத்தி வாங்கியவனை எப்படி மறந்திருப்பார்? சாதரணமாகவே திருகோணமலைக்கு வரும் எல்லோருமே பொதுச் சந்தைக்கு முன்னாலுள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் இறங்குவதும் ஏறுவதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பர். அப்போது பொதுவாகவே நடை பாதைக் கடையில் பொருட்களை வாங்குபவர்களாகவே இருப்பர். அவர்கள் அனைவரையும் அந்தக் கடைக்காரர் ஞாபகம்.......**

வைத்திருப்பதில்லை. அதற்கான வாய்ப்புக்களும் இல்லை. ஏனெனில் அனைவரையும் ஞாபகம் வைத்திருக்க முடியாது தானே. ஆனால் அந்த ஒருவனை மட்டும் அவரால் ஞாபகம் வைத்திருக்க முடிந்தது.

திருகோணமலைக்கு மிகவும் புதியவனான அவன் அன்றைய தினம் அவனது கடைக்கு வருகை தந்து கத்தியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக முயன்றான். பல கத்திகளை பரீட்சித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனின் பரீட்சிப்பு முயற்சிகள் மிகவும் வித்தியாசமான வையாக இருந்தன. கைக்கடக்கமான கத்தியொன்றைத் தெரிவு செய்வதற்காக அவன் மேற்கொண்ட முயற்சிகளில் இருந்து அவன் எல்லோரிலும் இருந்து வேறுபட்டிருப்பதுடன் அக் கத்தியை வாங்க முயற்சிக்கும் அவனின் நோக்கம் சாதாரண மனிதர்களின் நோக்கங்களில் இருந்து வேறுபடுகின்றதான சந்தேகமொன்றை அவருக்கு ஏற்படுத்தி விட்டிருந்தது. சந்தேகத்தை நீண்ட நேரம் வைத்திருப்பது அவருக்குப் பழக்கமில்லாதது. எனவே ஒரு சினேகபூர்வ சம்பாசனையை அவனுடன் அவர் ஆரம்பித்தார்.

''மகனே... என்ன தேவைக்காகக் கத்தி தேடுறியள்"

சம்பாசனையை ஆரம்பித்த வுடனேயே அதனை ஏற்றுக்கொள்ளத் தக்க மனநிலையில் அவன் இல்லை என்பதை அசூசையான அவனின் முகச்சுளிப்பு வெளிக் காட்டியது.

"சமையலுக்குத் தான் ஐயா... தேங்காய் உடைக்கிறது... இறைச்சி வெட்டுறது" எனச் கூறிக் கொண்டே அவனது கைகள் மற்றொரு கத்தியைப் பரிசீலிக்கத் தொடங்கி விட்டன.

''என்னட்ட இவ்வளவு கத்திகளும் தான் இருக்கு இன்னும் நல்ல கத்திகள் தேவையெண்டால்... அந்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு பக்கத்தால இடது பக்கம் திரும்புற றோட்டில நிறையக் கடைகள் இருக்கு"

''ம்......ம்'' ஒரே வார்த்தையில் பதில் வந்தது. அத்துடன் வேகமாக அவ்விடத்தை விட்டு நகரும் முனைப்பும் அவனிடம் ஏற்பட்டிருந்ததை அவர் அவதானித்தார். எனினும் சம்பா சனையைத் தொடரமுடியாத படி மற்றொரு வாடிக்கையாளர் அங்க வரவே அவரைக் கவனிக்க வேண்டியதாகப் போய்விட்டது. அவருடைய தேவையைப் பூர்த்தி செய்த பின்பும் அப் புதியவன் தனது கத்தி தேடும் பணியை முடித்திருக்கவில்லை.

'' நீங்கள் திருகோணமலை என்றால் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் எந்தக் கடைல நல்ல கத்தி கிடைக்கும் என்று"

" நான் திருகோணமலை தான்"

" அப்பிடியா... எந்த இடம்...."

இந்தக் கேள்வியால் அவன் அதிர்ச்சியுற்றான்.... அவனுக்கு திருகோணமலையின் நகரிலுள்ள இடங்களின் பெயர்கள் எதுவுமே அவனுக்குத் தெரியாது. என்றாலும் அவனது மூளை மிக வேகமாகச் சுழன்றது. தனது நண்பன் அவனது மனைவியுடன் கைத்தொலைபேசும் போது தான் விமானப் படைத் தலைமையகத்திற்கு வந்ததாகத் தெரிவித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. அப்போது அந் நண்பன் அப்பிரதேசத்தின் பெயரை உச்சரித்திருந்தான்.

" சைனபே..." என்று பதிலளித்த அவனின் முகத்தில் ஒரு திருப்தி இளையோடியது. பதிலளித்ததால் அல்ல. தனது தேவைக்குப் பொருத்தமான கத்தியொன்றை அக்கடையில் தேர்ந்தெடுத்து விட்டதாலேயே...

''அய்யா எவ்வளவு சொல்லுறியள் இந்தக் கத்திக்கு?" எவ்வளவு சொன்னாலும் வாங்கிப் போகும் நிலையில் அவன் இருந்ததை அவரது வியாபாரமூளை புரிந்து கொண்டது.

ஒரு நல்ல விலைக்கு அவருக்கு அன்று கத்தியொன்று விலை போனது. அந்தக் கத்தியின் நோக்கம் மனிதப் படுகொலை என்பதை அப்போது அவர் உணர்ந்திருக்கவில்லை. அன்று 17ம் திகதி, ஏப்ரல் மாதம், 2012ம் ஆண்டு.

அடுத்த நாள் காலையில் அவர் தனது நடைபாதைக் கடையை விரித்த போது அந்தச் செய்தி அவரை உலுக்கியது.

தனது கடையிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்திலுள்ள வீதியில் இளைஞன் ஒருவனின் உயிர் கொலையாளர்களால் காவு கொள்ளப்பட்டிருப்பதாக. அவர் செய்தியைக் கேள்விப்பட்டதும்



ஓட்டமும் நடையுமாக அந்த இடத்திற்கு விரைந்தார். எனினும் அவர் போன நேரத்தில் கொலையுண்ட இளைஞனின் சடலம் அங்கிருந்து அப்புறப்படுத்தப் பட்டிருந்தது.

அங்கு நின்ற பலர் அவ்விளைஞன் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்ததாகவே தெரிவித்தனர்.

பெரும்பான்மையினத்தவரான அவருக்கு அங்கு காவலில் நின்ற காவல்துறை வீரரைக் கொஞ்சம் பழக்கமிருந்தது. மெதுவாக அவ் வீரரை அண்மித்த கடைக்காரர்...

" மகனே.. இப்ப கதைக்க ஏலுமா"

" ஓம் பிரச்சனையில்லை.. எல்லாம் முடிஞ்சுது... நீங்கள் என்னோட கதைக்கலாம்... கொஞ்சம் இஞ்சால வாங்க...."

எடுத்தவுடனேயே அவருது கேள்வி " எப்பிடி கொலை நடந்திருக்கு"

" கழுத்தை வெட்டியிருக்கிறான்... அதோட தாடையிலயும் வெட்டு ஆளமாப் பதிஞ்சிருக்கு... அதால வாய் பக்கம் கிழிச்சிருக்கு"

"எத்தனை மணிக்கு நடந்தது"

"இரவு 8.45 எண்டு சொல்றாங்கள்... நான் இஞ்ச ஸ்பெசல் டியூட்டிக்கு வரேக்க 9.30 இருக்கும்" அடுத்து ஆர்வக் கோளாறால் அவரது வாயில் மற்றொரு கேள்வியும் வந்தது

'' ஆளைப் பிடிச்சாச்சே......"

" சேச்சே..... ஆர், ஏன், ஏதுக்கு எண்டுறதே இன்னும் தெரியேல்ல என்று எஸ்.ஐ. சொன்னவர்... சாட்சியத் தேடித் திரியினம் போலக் கிடக்கு" அக் காவல்துறைக்...... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு முரசு

## கிழக்கின் அமைச்சு, திணைக்கள அலுவலரிடையே துடுப்பாட்டப் போட்டி



கிழக்கு மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கிடையில் துடுப்பாட்டப் போட்டியொன்று நடை பெற்றுள்ளது என ரிங்கோ நெட் செய்திகள் தெரிவிக்கின்றன.

சினேகபூர்வச் சுற்றுப் போட்டி களாக நடாத்தப்பட்ட இப் போட்டிகளில் 17 அணிக்ள் கலந்து சிறப்பித்திருந்தன. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிகளுக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் திரு.மதிவண்ணன் தலைமை யேற்றி ருந்தார். பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அமலநாதன் அவர்கள் கலந்து கொண் டார்.இறுதிப் போட்டியில் மாகாணக் கல்வித்திணைக்களமும், மாகாண சுகாதாரத் திணைக்களமும் ஒன்றை யொன்று எதிர்கொண்டன.



விறுவிறுப்பாகவும் கடும் போட்டி யாகவும் அமைந்த இவ்விறுதி மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் மாகாண கல்வித் திணைக்களம் வெற்றி பெற்றது.

## அகில இலங்கை ஆசிரியர் துடுப்பாட்டப் போட்டி – அக்கரைப்பற்று சம்பியன்

அகில இலங்கை ஆசிரியர்க ளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இப்போட்டிகள் நுவரெலியா குதிரைப்பந்தயத் திடலில் நிகழ்கின்றன. இப்போட்டிகளின் அங்கமாக நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டிகளில் அக்கரைப்பற்று கல்வி வலய ஆசிரியர் அணி மத்திய மாகாண கல்வி வலய ஆசிரியர் அணியை இறுதிப் போட்டியில் எதிர்கொண்டது.

இவ்விறுதிப் போட்டியில் மத்திய மாகாணக் கல்வி வலய அணியை அக்கரைப்பற்று கல்வி வலய ஆசிரியர் அணி வெற்றிகொண்டது.

## றகர் களியாட்டப் போட்டிகள் கிழக்கில்

அக்கரைப்பற்று கல்வி வலயப் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கு இடையே றகர் களியாட்டப் போட்டி நிகழ்ச்சியொன்று 04.12.2013 அன்று நடந்தேறியுள்ளது. இப் போட்டியில் 12 வயதிற்கு உட்பட்ட 20 அணிகள் கலந்திருந்தன.

பாலமுனை மின்ஹாஜ் பாடசாலையில் நடைபெற்ற இப் போட்டியின் போது அதிதிகளால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை றகர் சம்மேளத்தினால் நடாத்தப்படும் இக் களியாட்டப் போட்டிகள் மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகளிலும் நடாத்தப்பட்டுள்ளது.

## இலங்கைச் செய்தியாளர்களுக்கு சனல் 4 இன் வெளிவிவகாரச் செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் மில்லரின் திறந்த கடிதம்



**கடந்தவாரத் தொடர்ச்சி......**

உணர்ச்சியற்ற முகத் தோடு எப்படி இதை அவர் செய்தார் என்று என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை. உங்களில் சில பத்திரிகையா சிரியர்கள் கட்டப்பட்ட ஆடுகளைப் போலிருக் கிறீர்கள்.

உங்கள் அரசின் தொலைக் காட்சி பியொங்யாங்கை ஜகொரிய ஜனநாயக மக்கள் குடியரசு அல்லது வடகொரி யாவின் தலைநகரம் நோக்கி நகர்ந்த படியிருக்கிறது. உங்களில் குறைந்தபட்சம் ஒன்பது பேர் களாவது கடந்த பத்து வருடங் களில் கொல்லப பட்டிருக்கிறார்கள் என அறிகிறேன்.

முன்கூட்டியே அறிவிக் கப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவின் சாவைப்போல என்னைச் சில்லிட வைத்தது எதுவு மேயில்லை. பிரகீத் எக்னெலிகொட கடத்தப் பட்ட கணவர் பிரகீத் எக்னெலிகொட குறித்து அவர் மனைவி இன்னும் விசாரித் துக்கொண்டே இருக்கிறார் எனக் கேள்வி ப்படும்போது நான் வலியில் சுருங்கிப் போகிறேன். எக்னெலிகோடாவின் தடயமென்று எதுவுமில்லை என்று நீங்கள் கேள்விப பட்டதை நானும் கேள்விப்பட்டேன்.

பத்திரிகைச் சுதந்திர த்தைப் பொறுத்தமட்டில், நியூயார்க்கைத் தளமாகக் கொண்டுள்ள 'செய்தியாளர்கள் பாதுகாப்புக் குழு' இலங்கையை179-ல் 162-ஆவது இடத்தில் தரவரிசைப் படுத்தியிருக்கிறது என்றறிவேன்.

உங்கள் ஆயுள் எதிர்பார்ப்பை அபாயத்துக்கு உள்ளாக்கி நீங்கள் கடந்து செல்லும் சிவப்புக்கோடுகள் எனக்குத் தெரியும். ராஜபக்ச சகோதரர்களை விமரிசித்து எழுதுவதில் உங்களுக் கிருக்கும் இடர்ப்பாடு எனக்குத் தெரியும்.

இராணுவத்தைப் பற்றி உங்க ளால் எழுத முடியாது. மேலும் எங்களைப் போலன்றி, உங்களால் போரைக் குறிப்பிடக்கூட முடியாது.

'எல்லையற்ற செய்தியாளர்கள் அமைப்பால்' உலகில் எங்கிருக்கும் எந்தப் பாராளுமன்ற சனநாயகத்துக்கும் ஆக மோசமான வரலாறுடைய பத்திரிகை சுதந்திரம் என்று தரவரிசைப் படுத்தப் பட்டிருக்கிற வரலாறோடு நீங்கள் வசிக்கிறீர்கள் என்று தெரியும்.

எனினும், இலங்கையைப் பாராளுமன்ற சனநாயகம் என உருவமைப்பது முரண்நகையை இன்னும் நீட்டிப்பது போலாகும்.

இருந்தாலும், இந்தத்தடைகளைத் தாண்டி துணிவோடு உங்கள் வேலைகளைச் செய்ய நீங்கள் வழிகளைக் கண்டுபிடித்திருப்பதை நான் வியக்கிறேன்.

நேற்று ராஜபக்சவின் செய்தி யாளர் கருத்தரங்கத்தில் ஒரு சிங்களச் செய்தியாளர் முதலில் எழுந்து போர்க் குற்றச்சாட்டுகளைக் குறித்து அதிபரிடம் கேட்டபோது, என் நாற்காலியிலிருந்து ஏறக்குறைய நான் விழுந்தேவிட்டேன்.

போற்றுதல் அவர் அதைச் செய்ததற்கு நாங்கள் அனைவரும் சாட்சி. இலங்கையின்மேலிருக்கும் வெளிச்சம் மீண்டும் அகன்றவுடன் அவர் நலமாயிருக்க கடவுளின் அருளில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

எங்கள் பாதுகாப்புக்கு வந்த அச்சுறுத்தல்களால், எங்கள் திட்டப் படியின்றி முன்னதாகவே வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டு, இப்போது இதை விமானத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

உங்களின் ஞாயிறு தினச் செய்தித்தாள்களை நான் வாசிக்கிறேன். சில சமயம் புத்திசாலித்தனமாகச் சுற்றுவழிகளில் நீங்கள் செயல்படுவது புரிகிறது.

உண்மையில் எவ்வளவு கடினமாக அது இருக்கும் என்று புரிகிறது. தங்கள் வாழ்வு ஆபத்திலிருக்க அந்த மனிதர்களை நீங்கள் மேற்கோள்காட்டிப் பேச நேரும்போது பயங்கரமான தடுமாற்றத்தை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருப்பது புரிகிறது. உண்மையில் அது இக்கட்டானதுதான். உங்கள் பதற்றங்களில் நான் பங்கு கொள்கிறேன்.

உங்களைச் சந்தித்தது புத்துணர் வூக்கம் தந்தது. அடக்குமுறையை எதிர்கொண்டபடி நீங்கள் செயல்படுகின்ற விதத்துக்காக நாங்கள் அனைவரும் உங்களைப் போற்றுகிறோம்.

**நன்றி**

**குளோபல் தமிழ்ச் செய்திகள்**

# திருகோணமலை சைவ அன்பர்களின் வேண்டுகோள்

**உரியவர்களின் கவனத்திற்கு**

## *திருக்கோணேஸ்வர ஆலயத்தினை சூழவுள்ள நடைபாதை க் கடைகள்*

திருக்கோணேஸ்வர ஆலய மானது மிகவும் இயற்கையான எழில்மிகு பிரதேசமாகும். இது எமக்குக் கிடைத்த மிகப்பெரிய கொடையாகும். இவ் ஆலயத்தினை பாதுகாப்பது எமது அணைவரது கடமையாகும். எனினும் ஆலயத்தின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் வகையில் காணப்படும்.

அனுமதியற்ற நடைபாதை எங்கும் நிறைந்து் காணப்படும். அனும தியற்ற நடைபாதைக் கடைகள் ஆகும். இவ் நடைபாதைக் கடைகள் மூலம் நாளாந்தம் பலவிதமான பிரச்சினை களினை நாம் தொடர்ந்து அவதானித்து வருகின்றோம். அவையாவன

1. எமது ஆலயத்திற்குச் செல்லும் பாதை மிகவும் சிறியது. அப்பாதைகளில் அமைக் கப்பட்டிருக்கும் கடைகளால் எம்மால் சௌகரியமாக ஆலயத்திற்குச் செல்ல முடியாத வகையில் வீதி சிறிதாக்கப்பட் டுள்ளது.
2. ஆலய தரிசனத்திற்கு வரும் பக்தர் களுக்கு மற்றும் சுற்றுலாப்பயணிகளுக்கு இடைஞ்சலாக நெருக்கடியான சூழ்நிலை காணப்படுகின்றது. (சனி,ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள்)
3.கடைகள் அனைத்தும் ஆலய எல்லைக் குள் அமைக்கப்பட்டுள்ளதை அவதானி க்கக்கூடியதாக உள்ளது. (அதாவது அன்னதான மண்டபத்தில் இருந்து பாதணி காப்பகம் வரை இரு பக்கமும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளது.)
4. இவ்வாறான இடைஞ்சலான சூழ்நிலை மூலம் சில சந்தர்ப்பங்களில் ஒரு சில விபத்துக்களும் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.
5. இக் கடைகள் மூலம் இப்பிரதேசம் எங்கும் குப்பைக்கூழங்கள் மற்றும் பழைய உணவுப் பொருட்கள் எங்கும் வீசப்பட்டுக் காணப்படுகின்றது.
6. இக்கடைகள் சிறிது சிறிதாக தற் பொழுது பெரிதாக்கப்பட்டுள்ளதை நாம் சென்று வருகின்ற பொழுது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.
7. எமது இவ் அழகிய இயற்கையான ஆலயத்தின் சுற்றுப்புறம் தற்பொழுது கடைகள் மூலம் மாற்றம் அடைந்து வருகின்றது.
8. காலப்போக்கில் இவ் இடத்தினை தங்களுக்கு உரியது என்று உரிமை கொண்டாடக் கூடிய நிலை ஏற்படலாம். 9. இதன் மூலம் கடை அமைத்தவர்கள் அவ் இடத்தில் தங்குவதற்கான சூழ்நிலை ஏற்படலாம்.

இது போன்ற பல பிரச்சினைகளினை இக் கடைகள் மூலம் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இக்கடைகள் தொடர்பில் ஆலய நிர்வாகமோ, நகர சபையோ, அரசியல் பிரமுகர்களோ எதுவித நடவடிகடகையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு அசட்டையாக இருந்துவிட்டு பிற்காலத்தை எம்மைவிட்டு போய்விட்டது.

எமது இடத்தில் அத்துமீறி இருந்து விட்டார்கள். என்று அறிக்கை யிடுவதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. எனவே இது விடயத்தில் பொது மக்கள் உட்பட யாவரும் கூடிய அக்கறை எடுத்து இதற்கான தீர்வினை மிக விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

*சைவ அன்பர்கள்*
*திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

## பாடம் - தமிழ் மொழியும் இலக்கியமும் 1

21) பின்வருவற்றுள் வாக்கியம் **அல்லாதது** எது?
1.யாது செய்வோம் 2.பொய் பேசாதீர்
3.பரமனைப்பாடுங்கள் 4.கட்டறுந்த மாடு

22) பின்வருவனவற்றுள் கூட்டுவாக்கியத்திற்கு உதாரமாக அமைவது
1.மேகம் கலைந்தது :மழை பெய்தது:வெள்ளம் பாய்ந்தது
2.மயில் அழகாக ஆடியது
3.பாரதி ஒரு மகாகவி என்பது ஆய்வாளர்முடிவாகும்
4.கண்ணன் குழல் ஊதினான்

23) பூங்குழல் இனிமையாகப் பாடினாள்.இங்கு பூங்குழல் என்பது
1.அன்மொழித் தொகை 2.வேற்றுமைத் தொகை
3.உம்மைத் தொகை 4.உவமைத் தொகை

24) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற தொகுதியை தெரிவு செய்க.
1.கூட்டுப் பெயர்: வானொலி, குதிரைப்படை,கண்காட்சி
2.ஆக்கப் பெயர்:கொடையாளி, புத்திசாலி,முயற்சி
3.கூட்டு வினை:காட்டிக்கொடு, தந்தியடி, சுட்டிக்காட்டு
4.தெரிநிலை வினைமுற்று:செய்தேன், படித்தானை, படித்தான்

25) இறந்தான் என்பதை இறைவனடி எய்தினான் எனக் கூறும் வழக்கு
1.குழூஉக்குறி 2.இடக்கரடக்கல் 3.மங்கலம் 4.மரூஉ

26) செயற்படுபொருள் குன்றிய வகை வாக்கியத்திற்கு உதாரணம்
1.குமரன் நடந்து சென்றான் 2.குமரன் இனிமையாகப் பாடினான்
3.குமரன் பாட்டுப் பாடினான் 4.குமரன் படித்தான்

27) மிதிலை நகர் வாயில் கொடிகள் இராம இலக்குமணரை வாருங்கள் வாருங்கள் என அழைப்பன போல் அசைந்தன.இங்கு கையாளப்பட்டுள்ள அணி
1.உவமை 2.உருவகம் 3.தற்குறிப்பேற்றம் 4.உயர்வுநவிற்சி

28) போற்றினான் என்பதன் பகுப்பு
1.போற்ற+இன்+ஆன் 2.போற்றி+இன்+ஆன் 3.போற்று+இன்+ஆன்
4.போற்+றின்+ஆன்

29) மன்னனிற் கற்றோன் சிறந்தவன் இங்கு மன்னன் என்ற பெயர் சொல்
1.நான்காம் வேற்றுமைஉருபேற்றுள்ளது
2.ஐந்தாம் வேற்றுமை உருபேற்றுள்ளது
3.ஆறாம் வேற்றுமை உருபேற்றுள்ளது
4.ஏழாம் வேற்றுமை உருபேற்றுள்ளது

30) இணைப்பிடைச் சொல்லின் பின் காற்புள்ளி இடப்படும் என்பதற்கு உதாரணம்
1.கண்ணே, கலங்குவது ஏன?
2.இனி,ஆக வேண்டிய கருமங்களை கவனிப்போம்
3.கண்ணன், கர்ணனிடம் பாண்டவருக்காகத் தூதுபோனான்
4.தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமயம்ஆங்கிலம், வரலாறு என்பன கருப்பாடங்களாகும்.

31) மனிதனின் எதிரிகள் இரண்டு ஒன்று பயம்:மற்றது கவலை பயம்வலுப்படைத்த வியாதி: கவலை அரிக்கும் நோய்.பயத்தாலும் கவலையாலும் மனிதன் வாழ்வை நரகமாக்கி கொள்கின்றான்:சூழ்ந்திருப்போர் வாழ்வையும் கெடுக்கின்றான்.
1.பயத்தை விட கவலையினால் தான் மனிதன் அதிகம் பாதிக்கப்படுகின்றான்
2.மனிதனின் வாழ்வு பயத்தாலும் கவலையினாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.
3.பயத்தாலும் கவலையாலும்மனிதன் தன்வாழ்வையும் பிறர்வாழ்வையும் கெடுக்கின்றான்
4.மனிதனைச் சூழ்ந்திருப்போரின் எதிரிகளே பயமும் கவலையுமாகும்.

32) அக்காலத்தே வாழ்ந்த மக்கள் உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்ந்தி ருந்தனர். அனைவரும் உடற்பயிற்சி உடையவர்களாக விளங்கினர்.அன்று கல்வி இரண்டாவதாகவே காணப்பட்டது.இக்காலத்தில் அந்நிலை பெரிதும் மாறுபட்டுவிட்டது.இளைஞர்கள் கல்வி கற்பதிலேயே கூடுதலான ஆர்வம் காட்டுகின்றனர்.
1.அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் கல்வியில் அக்கறை காட்டவில்லை.
2.இக்காலத்து இளைஞர்கள் உடற்பயிற்சிகளில் சிறிதேனும் அக்கறை செலுத்தவில்லை.
3.அக்காலத்து மக்களுக்கும் இன்றைய இளைஞர்களுக்கும் வேறுபாடில்லை.
4.இக்காலத்து இளைஞர்கள் உடற்பயிற்சியை விட கல்வி கற்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்

33)நீர் இங்கே இருந்திரென நான் அறிந்திருந்தால்
1.உடனே வருகிறேன் 2.உடனே வந்திருப்பேன்
3.உடனே வந்திருந்தேன் 4.உடனே வருவேன்

34)அந்த மரத்தின் ஒவ்வொரு
1.பழமும் நல்லது 2.பழமும் நல்லவை
3.பழங்களும் நல்லவை 4.பழங்களும் நல்லது

35)அரசன் எவ்வழிச் செல்கிறானோ குடிகளும்
1.அங்ஙனமே செல்வர் 2.எவ்வழியே செல்வர்
3.அவ்வழியே செல்வர் 4.அவ்வண்ணமே செல்வர

36) 1.குறிக்கோள், மேற்கோள், வேண்டுகோள், கருதுகோள்
2.திணைக்களம், களஞ்சியம், கொந்தளிப்பு, ஊழியம்
3.வளர்ச்சி,உயர்ச்சி, தொடர்ச்சி, தளர்ச்சி
4.சம்பளம், கம்பழி, உளவியல, நாளங்காடி

37)வறியவர்களுக்கும் வலதுகுறைந்தோருக்கும் முதியோருக்கும் உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிப்பதற்கென . அமைக்கப்பட்டுள்ளன.
1.அன்னசாலை 2.ஆதுலர்சாலை 3.ஆச்சிரமங்கள் 4.பாசறைகள்

38)தேர்தல் நெருங்கி வருவதால் தேர்தல் சூடுபிடித்துள்ளது.
1.விஞ்ஞாபனம் 2.பிரசுரம் 3.பிரசாரம் 4.வாக்குமூலம்

39)வகுப்பறை மூலம் மாணவரது பாட அடைவுமட்டத்தை அறிந்துகொள்ளலாம்.
1.ஒதுக்கீடு 2.கணிப்பீடு 3.உள்ளீடு 4.தலையீடு

40)(அ) பழமொழிகளை யார் எப்போது இயற்றினர் என்று சொல்ல முடியாது.
(ஆ)அவைஅவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்து விட்டு மறைந்துபோகின்றன
(இ) அத்தகைய வாக்கியங்களே பழமொழிகள்
(ஈ) நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுவன.
(உ) எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கவையாகப் பிறந்து மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும்
(1)ஈ ஆ உ இ அ (2)ஆ உ இ அ ஈ (3)இ ஈ அ உ (4)அ ஆ உ ஈ .இ

### பகுதி 11

1)சுருக்கமான விடைதருக.

1. பின்வரும் தொடரை பிரித்து எழுதுக.
மாலைமுன்றிற் குறுங்காற்கட்டில
2. வல்லமை தாராயோ - இந்தமாநிலம் பயனுற வாழ்வதற்கே-இவ்வடியிற் காணப்படும் எழுவாய் பயனிலையைக் குறிப்பிடுக?
3. கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகி அடிக்கப்பாலாறு-இங்கு கிறுகி என்பதன் பொருள் யாது?இச்சொல் இலங்கையின் எப்பிரதேசத்தில் வங்கப்படுகின்றது?
4. மக்கள் பயிர் செய்வதற்காகக் காடுகளை அழித்தனர்-இவ்வாக்கியத்தை செயற்பாட்டு வினைவாக்கியமாக மாற்றுக.இதிற் காணப்படும் செயற்பாட்டுவினை தொகுதி யாது?
5. ஆரது வைரமுத்துவின் குரல் போல இருக்கு என்று வினாதையார் கேட்டார்-பொருத்தமான நிறுத்தக்குறிகளையிட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக?
6. குலை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக?
7. உரைப் பகுதியொன்றைச் சுருக்கி எழுதும் போது பின்வருவனவற்றுள் எவற்றை தவிர்க்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுக?
கூறியது கூறல் -மூலக்கருத்து சிதையாமை-பல சொற்களுக்கு ஒரு சொல்-உதாரணம் தருதல்
8. உத்தியோக பூர்வக் கடிதத்திலும் உறவு முறைக் கடிதத்திலும் விளித்தல் பகுதி எவ்வாறு வேறுபடும் என்பதை உதாரணம் மூலம் விளக்குக?
9. உரையாடல் ஒன்றறை எழுதும் போது எழுத்துவழக்கிலேயே எழுத வேண்டும்.இக்கருத்தை ஏற்றுக் கொள்வீரா? காரணம் தருக?
10. நேர்முக வருணனையாளன் ஒருவனுக்கு தான் வருணிக்கும் நிகழ்ச்சி பற்றிய முன்னறிவு அவசியமானது - இதனை ஓர் உதாணமூலம் விளக்குக?

11.மாலை + முன்றில் + குறுமை + கால் + கட்டில்

12.நீ – தோன்றா எழுவாய் தாராயோ – பயனிலை

13.கிறுகி – திரும்பி திரும்ப சுழன்று கிழக்குப்பிரதேசத்தில் வழக்கில் உள்ளது.இச்சொல் மட்டக்களப்பு பிரதேசத்தில் வழக்கில் உள்ளது.

" 2013 டிசம்பர் மாதம் **G.C.E ( O/L)** பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களுக்கும் மலைமுரசு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்."

ஆசிரியர் : அ.ரவீந்திரன் B.A (HONS) TAMIL SPECIAL DIP. IN EDUCATION
உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன தமிழ்ப் பாட ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 14 பாடம் - விஞ்ஞானம்

01. $0.5moldm^{-3}$ செறிவுடைய $NaOH$ இன் $600ml$ கரைசலின் செறிவை $0.3moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
   1. $200ml$ 2. $300ml$ 3. $400ml$ 4. $600ml$
02. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?
   1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்.
   2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்.
   3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்.
   4. மின்முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்.
03. உலோகம் ஒன்றின் அடர்த்தி $2400 Kg$. அதன் கனவளவு $0.3m^3$ ஆகும். இவ்வுலோகத்தின் $1000Kgm^{-3}$ அடர்த்தி கொண்ட திரவத்தினுள் முழுமையாக அமிழ்த்தும் போது தோற்ற நிறை யாது?
   1. $2040N$ 2. $2400N$ 3. $4200N$ 4. $3300N$
04. பழங்களுக்கு விசிறி வெட்டுப்படை உண்டாவது தாமதப்படுத்தப்படுவதன் மூலம் பழம் வருவதை தாமதப்படுத்தும் ஓமோன் எது?
   1. $IAA$ 2. 3. $2,4-D$ 4. $BST$
05. குறித் ஒரு குறுக்கலை உருவாகும் போது ஒரு செக்கனுக்கு 2 தாழிகளும் 2 முடிகளும் உண்டாகின்றன. இந்த அலையின் இரு அடுத்துள்ள முடிகளுக்கிடையே இருக்கும் தூரம் $0.2m$ எனின், அலையின் வேகம் யாது?
   1. 0.1 2. $0.4ms^{-1}$ 3. $0.8ms^{-1}$ 4. $10ms^{-1}$
06. இலங்கையை உலுக்கிய டெங்கு நோக்காவியான நுளம்பு மனிதனுக்கு எந்த நேரம் அதிகளவில் பாதிக்கின்றது?
   1. காலை 4.30 முதல் 10.30 வரையும், மாலை 4.00 முதல் 7.00 மணி வரையும்
   2. காலை 6.30 முதல் 10.00 வரையும், மாலை 3.30 முதல் 6.30 மணி வரையும்
   3. காலை 5.30 முதல் 9.30 வரையும், மாலை 4.00 முதல் 8.00 மணி வரையும்
   4. காலை 7.30 முதல் 9.30 வரையும், மாலை 5.00 முதல் 8.00 மணி வரையும்
07. 2006 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் எத் தடிப்பிலும் குறைவான பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டது?
   1. $30\mu$ 2. 20 3. 35 4. 25
08. கீழ்வரும் பொருட்களில் நிறப்பூச்சுக்கள் தயாரிக்கும் போது பச்சை நிறத்திற்கு காரணமான இரசாயன பொருள் எது?
   1. 2. $PbCrO_4$ 3. $Cr_2O_3$ 4. $C$ தூள்
09. $H_{2(g)} + Br_{2(g)} \rightarrow 2HBr$ வெப்ப உள்ளுறை மாற்றத்தைக் கணிக்க.

   $H_2 \rightarrow 2H$

   1. -63 2. $-73KJ$ 3. $-71KJ$ 4. $-74KJ$
10. நைதரசன் வாயுவின் உபயோகம் அல்லாதது எது?
    1. ஐதரசீன் தயாரிப்பில் பயன்படுகிறது.
    2. வானூர்திகளின் டயரை நிரப்ப பயன்படுகிறது
    3. எண்ணெய் சேமிப்பு தாங்கிகளில் ஒட்சிசனை அகற்றப் பயன்படுகிறது
    4. பொலிவைனல் குளோரைட்டு தயாரிப்பில் பயன்படுகிறது.
11. தேசிய சுண்ணாம்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக் கல்லில் அடங்கும் பொருள் எது?
    1. கல்சியம் ஒட்சைட்டு 2. கல்சியம் காபனேற்று
    3. கல்சியம் பொசுபேற்று 4. கல்சியம் சல்பேற்று
12. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
    1. கம்பமேலணி 2. கனமேலணி 3. படைகொண்ட மேலணி
    4. பிசிர் மேலணி
13. $30^o c$ யின் பெறுமானத்தை $K$ (கெல்வினுக்கு) மாற்றுக.
    1, 2. $361.15K$ 3. $303.15K$ 4. $342.15K$
14. செக்கனுக்கு $5m$ என்னும் கதியை மணிக்கு கிலோ மீற்றரில் தருவது பின்வருவனவற்றுள் எது?
    1. 2. 3. $5 \times \frac{3600}{1000}$ 4. $\frac{5}{1000} \times 3600$
15. துலக்கப்பட்ட சீமெந்துத் தரையில் உள்ள ஓர் அலுமாரியை $500N$ கிடை விசையினால் மட்டுமட்டாகத் தள்ள முடியும். அலுமாரி கரடுமுரடான ஒரு தரையில் வைக்கப்பட்டு அதனைத் தள்ளுவதற்கு $500N$ கிடை விசை பிரயோகிக்கப்பட்டால் அதன் மீது தாக்கும் உராய்வு விசையானது
    1. $500N$ க்குக் கூடியது 2. $500N$ க்குச் சமனானதாகும்
    3. $500N$ க்குக் குறைவானதாகும் 4. தரவுக்கமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடம் - கணிதம், 11

01) கூட்டுத்தொகை யாது? $0.782 + 0.02$

02) $^m/_4 = 6$ எனின், m இன் பெறுமானத்தைக் காண்க.

03) பெறுமானத்தைக் காண்க. $(-3)^3$

04) ஒன்று ரூபா 3.25 ஆன 18 வாழைப்பழங்களின் விலை யாது?

05) ஏறுவரிசையில் எழுதுக. $^3/_8$ , $^3/_7$ , $^3/_9$

06) பரீட்சை ஒன்றுக்கு 8975 பரீட்சாத்திகள் தோற்றினர். இவர்களில் 3599 பரீட்சாத்திகள் சித்தியடையவில்லை எனின், சித்தியடைந்த பரீட்சாத்திகளின் எண்ணிக்கை யாது?

07) என்னிடம் ரூபா x உம் தம்பியிடம் ரூபா 6 உம் உள்ளன. எங்கள் இருவரிடமும் உள்ள மொத்ததொகையைக் காட்டுவதற்கு ஓர் அட்சர கணிதக் கோவையை எழுதுக.

08) சுருக்குக. $1\frac{1}{4} \times (^1/_3 + ^2/_5)$

09) $a = 4$ , $b = -2$ எனின், $2a^2 - 3b$ யின் பெறுமானத்தைக் காண்க.

10) தீர்க்க. $3m - 2(m - 2) = 3m + 5$

11) ரூபா 800 இன் $^1/_5$ எவ்வளவு?

12) உருவில் $^1/_3$ பகுதியை நிழற்றுக.



13) ஒரு பேனையின் விலை ஒரு பென்சிலின் விலையின் மூன்று மடங்காகும். ஒரு பேனையின் விலை ரூபா 18 எனின் ஒரு பென்சிலின் விலையை காண்க.

14) 4 தலையணை உறைகளைத் தைப்பதற்கு 2 மீற்றர் பொப்ளின் துணி தேவை. 5 மீற்றரிலிருந்து தைக்கப்படத்தக்க தலையணை உறைகளின் எண்ணிக்கை யாது?

15) ஒரு பக்கத்தின் நீளம் 4.6cm ஆன சமபக்க முக்கோணி ஒன்றின் சுற்றளவைக் காண்க.

16) 8 புத்தகங்களின் விலை ரூபா x ஆகும். ஒரு புத்தகத்தின் விலை யாது?

17) கூட்டுக. $77 + 7.7$

18) சுருக்குக. $11 + (-7)$

19) பிஸ்கட் பெட்டி ஒன்றின் உயரம் 30cm ஆகும். அத்தகைய 5 பெட்டிகள் ஒன்றன்மீதொன்றாக வைக்கும் போது மொத்த உயரத்தை மீற்றரில் தருக.

20) ஒருவர் ரூபா 250 இற்கு வாங்கிய பொருள் ஒன்றை ரூபா 300 இற்கு விற்றார். அவருக்கு கிடைத்த இலாபம் யாது?

21) $2 : 3 = 6 : m$ எனின், m இன் பெறுமானத்தைக் காண்க.

22) x = “3 எனின், $x^2 - 2$ இன் பெறுமானத்தைக் காண்க

23) 2.5 கிலோமீற்றரை மீற்றரில் காட்டுக.

24) $x + 5 = 8$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

25) பின்வரும் ஈட்டுக்களின் ஆகாரம் யாது? 3 , 5 , 6 , 9 , 5 , 1

26) $^1/_3$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

27) ஒரு கிலோகிராம் சீனியின் விலை ரூபா 42 எனின், 500 கிராம் சீனியின் விலை யாது?

28) ஒரு பென்சிலின் விலை ரூபா 6.50 ஆகும். அத்தகைய 1 டசின் பென்சிலின் விலை யாது?

29) ஒரு புத்தகத்தின் விலை ரூபா 34 ஆகும். அதனை வாங்குவதற்காக ரூபா 50 ஐ வர்த்தகருக்கு கொடுக்கும் போது கிடைக்கும் மீதிப்பணம் யாது?

30) $^1/_5$ ஐச் சதவீதமாக காட்டுக.

31) $x = 7$ எனின், $x^{-2}$ இன் பெறுமானம் யாது?

32) $20^0$ இன் நிரப்புக்கோணம் யாது?

33) சுருக்குக. $(x^{-3})^4$

34) சதுரம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 8 அலகுகள் ஆகும். அதன் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள்?

35) $n(A^1)$ ஐ காண்க.

36)







x இன் பெறுமானம் யாது?

37) 35km/h என்னும் கதியில் செல்லும் பேருந்து ஒன்று 2 மணித்தியாலத்தில் செல்லும் தூரத்தைக்காண்க.

38) சுருக்குக. $9 \times (-6)$

39) “81 இன் பெறுமானம் யாது?

40) 10 க்கு குறைந்த முக்கோண எண்களை எழுதுக.

41) ஒரு செவ்வகத்தின் நீளம் 30m அதன் சுற்றளவு 90m எனின், அதன் அகலத்தைக் காண்க.

42) மோட்டார் வண்டி 2 $l$ பெற்றோலில் 14km தூரம் செல்லும் எனின், 16 $l$ பெற்றோலில் எவ்வளவு தூரம் செல்லும்?

43) சுருக்குக. $^1/_2 \div ^2/_3$ இன் $^3/_4$

44) காரணிப்படுத்துக. $8m^2 + 4m$

45) சுருக்குக. 10"3 + 3"3 – 2"3

46) $0.6m = 2.4$ எனின் m இன் பெறுமானம் யாது?

47) $^{100}/_{125}$ மிகவும் எளிய வடிவில் தருக

48) 22 580 005 இதனைச் சொற்களில் எழுதுக.

49) $5.012 \times 10^4$ இதனை சாதாரண எண்ணாகத் தருக.

**கணிதம் வழிகாட்டல் -**
**திருமலையின் பிரபல ஆசிரியர்** **T.குமணன்**

உதயமாகும் 2014 ஆம் ஆண்டுக்கான கணித வகுப்புக்கள் ஆரம்பம். புதிய மாணவர்களுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றது.
**Year - 06, 07, 08, 09, 10, G.C.E(O/L) Sir : T.Kumanan * 0772975953 ***

“2013 டிசம்பர் மாதம் **G.C.E ( O/L)** பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.”

## கணீப்பீடா?......

உண்மை விபரமும் மறைக்கப்படும் எனத் தெரிகின்றது. ஒரு குடும்பம் முழுவதுமாக யுத்தத்தில் உயிரிழந்திருந்தால் அவர்களின் விபரங்களை சேர்க்க வேண்டாம். என தகவல் புதியுணர்களுக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டுல்லது.

அத்துடன் திருமணமான மகன், மகள் ஆகியோருடன் தங்கிவாழ்ந்த தாய், தகப்பன், தம்பி, தங்கை போன்ற நெருங்கிய சொந்தங்களை யுத்தத்தில் இழந்தாலும் அதனைக்கூட அறிக்கையிட முடியாது எனத் தெரிகின்றது.

அதே போலவே உறவுகள் எவருமின்றி அனாதை இல்லங்களில் வாழ்தோரையும், செஞ்சோலை போன்ற அமைப்புக்களில் வாழ்ந்தவர்களையும் அறிக்கைவிட முடியாதுள்ளது. அத்துடன் பதியப்படும் தகவல்களை சரிபார்க்கவும் வடிகட்டவும் பல்வேறு படிநிலைகள் உருவாக்கப்பட்டிருந்ததாகவும் பிரதேசச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளால் இழப்புக்கள் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்களை இருட்டடிப்புச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாகவே தெரிகின்றது.

## விழிப்புணர்ச்சிகள்....

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு திருகோணமலை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளஉள்ளனர். ஞாயிற்றுக் கிழமை 01.12.2013 காலை 9.மணிக்கு சிறைச்சாலைக்கு முன்னால் இந்நிகழ்ச்சி இடம்பெற உள்ளது.

## நகரிற்குட்பிரவேசிக்க.....

அவர்கள் மேற்கொண்டுள்ளார். அவரது முன்மொழிவுகள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பாதுகாப்பு அமைச்சால் மேல் நடவடிக்கைகளுக்காக முன்மொழியப் பட்டுள்ளது.

சாத்தியப்பாடுகளை ஆராய் ந்து நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்குமானால் குச்சவெளி சுற்று வட்டம் தாண்டிய பின் தொடருந்துப் பாதைக்கு சமாந் தரமாக புதியதொரு பெருந்தெரு உருவாகும்.

## கிழக்கிற்கு புத்தகக்..........

திருகோணமலையில் சுமார் ஒருவாரம் தரித்து நிற்கும் இக்கப்பலைப் பொது மக்கள் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கும் தகவல்கள் பார்வையிடல் கட்டணமாக ரூபா 50.00 அறவிடப்படும் என்றும் காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை பார்வையாளர் நேரமாக இருக்கும் எனவும் மேலும் தெரிவிக் கின்றது.

## அடையாளம் காண.........

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

தலையில் ஏற்படுததப்பட்ட காயத்தினால் முகம் சிதைவடைந்து உள்ளது. அவரின் நிலைக்கு ஏற்றவாறு காவல்துறை அவரின் முகத்தை ஒத்ததாக படமொன்றை வரைந்துள்ளது. இந்நபர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் குச்சவெளி காவல்துறை அல்லது அருகில் உள்ள காவல்துறை நிலையத்திற்கோ தொடர்பினை ஏற்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது

## படுகொலைக்கு........

தொண்டர்களின் கொலைகளுக்குப் பின்னாலுள்ள உண்மைகள்" எனத் தலைப்பிடப்பட்டு வெளியாகியுள்ள அறிக்கையிலேயே இக் குற்றச் சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

"அக்ஸன் பெய்ம்" இடமுள்ள தகவல்களின் அடிப்படையில் இலங்கைப் படையினரே இக் கொலைகளைச் செய்ததாகவும், அக் கொலைஞர்களை இலங்கையின் உயர்மட்ட அதிகாரம் பெற்றோர் காத்து வருவதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

"நாம் இலங்கையின் உள்ளக விசாணைகளில் நம்பிக்கை இழந்து விட்டோம். சாட்சிகளோ மொளனமாகி விட்டார்கள். உள்ளகப் பொறிமுறையானது வலுவிழந்து விட்டது. இச் சந்தர்ப்பம் வரைக்கும் நாம் உள்ளக விசாரணையின் ஊடாக என்ன முடிவு கிடைக்கும்? என்றே காத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இனியும் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்றாகிய பின் இக் குற்றத்தைப் புரிந்தவர்கள் யார்? என வெளிப்படுத்துவதே மனச்சாட்சிக்குச் சரியானது என நாம் எண்ணுகின்றோம்" என அவ் அறிக்கை மேலும் குறியிட்டுள்ளது.

எனினும் இக் குற்றச்சாட்டை உடனடியாவே மறுத்துள்ள இராணுவம் விசாரணை செய்யத்தக்க ஆதாரங்கள் எவற்றையும் வெளியிடாமல் இலங்கை மீது அவதூறு கூறும் மற்றொரு நடவடிக்கயையாகவே நாம் இதைக் கருது கின்றோம். யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை மீது கூறப்படும் பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களில் இதுவும் ஒன்று. இக் குற்றச்சாட்டை இன்னும் பல ஆவணங்களில் வெளியிட்டு வலிதற்ற கருத்தொன்றை உருவாக்கும் முயற்சியாகவே இதனைப் பார்க்கின்றது.

## மாணவர்கள் கொலை.......

எனவே இத்திட்டமிட்ட கொலைகளைப் புரிந்த குற்றவாளிகளுக்கு சரியான தண்டனையை வழங்க வேண்டும் என்றும் நீதிபதியை வேண்டினார். இவ் வழக்கு எதிர்வரும் 07ம் திகதிவரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

## பெண்களுக்கான....

உரிய வலையமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. செயற்பாடுகளுக்கான நிதி செலவினங்கள் கூட அவர்களால் உண்டியல் மூலம் சேகரித்த நிதி மூலமும், சில சங்கங்களின் நிதி அனுசரணைகளுடனும் மேற்கொள் ளப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வருடத்தில்குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களின் அனுபவங்களைப் பகிர்தலும், தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சித தலும்.,பாதிக்கப்பட்ட பெண்களை கௌரவித்து ஊக்கவித்தல். ஆகிய இரு விடயங்களும் முக்கியமான இவ்வருட நிகழ்வுகளில் குறிப்பிடத் தக்கதாக அமைகின்றது.



## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் மரணம்

கடந்த 1ம் திகதி உப்புவெளி காவல் நிலையத்திற்கு அருகில் 27 வயதான கௌரிசங்கர் வேகக் கட்டுப்பாட்டை மீறியதால் விபத்துக் குள்ளாகி மரணமாயுள்ளார்.

அன்றைய தினம் தனது நண்பரை அவரது வீட்டில் இறக்கி விட்டு விட்டு வந்த அவரை நிறுத்துமாறு சைகை செய்த போதும் நிறுத்தமல் சென்றதால் போக்குவரத்துக் காவல்துறையினர் விரட்டிச் சென்றதாகவும் அதன்போதே அவர் விபத்துக்குள்ளானதாகவும் நம்பகமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு கையில் அவர் நண்பரின் தலைக்கவசத்தை கொழுவியிருந்ததாகவும் அத்தலைக்கவசம் ஏற்படுத்திய இடையூறாலே அவர் விபத்தடைந்ததாகவும் தெரிகின்றது.

## அஹிம்சை முறைப்பயிற்சிப்பட்டறை



சோன்ட்[sond]நிறுவணத்தின் ஏற்பாட்டில் அஹிம்சை முறை மக்கள் இயக்கத்தை நோக்கி என்னும் தொனிப்பொருளில் பயிற்சப்பட்டறை சமாதான குழுவினரால் 30ம் திகதி காலை மட்டக்களப்பு கல்லடி சோன்ட் நிறுவணத்தில் நடை பெற்றது.

மட்டக்களப்பை சேர்ந்த சீலாமுனைஇ சின்ன உப்போடைஇ பெரிய உப்போடை மக்கள் இதில் கலந்து கொண்டனர். இதன்போது தங்கள் சமூகம் தொடர்பான முரண்பாடுகள் எவ்வாறு உண்டாகின்றன இதனை எவ்வாறு நிவர்த்த செய்வது ஓர் சமூகத்தில் முரண்பாடுகள் இல்லாமல் எவ்வாறு வாழலாம் எனவும் மக்களுக்கு விளிப்புணர்வு பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

ச.றொசானி

## மாகாணக் கல்வி அமைச்சின் வாதத்தைப் புறக்கணித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் விவாதத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புறக்கணித்துள்ளது.கிழக்கு மாகாண சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கல்வி அமைச்சிற்கான விவாதம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த விவாதத்தினையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர்.கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு மாறாக தவிசாளர் ஆரியவதி கலபதி சபையை வழி நடாத்தி சென்றதை கண்டித்தே சபை புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சபையின் நேற்றைய நடவடிக்கைகளை மாலை ஆறு மணிக்கு முடிப்பதற்குக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்ட்டது. எனினும் ஏழு மணிக்கு நேற்றைய அமர்வை முடிப்பதற்கு ஆளும் தரப்பினர் எடுத்த முடிவை கண்டித்து கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 11 பேரும் வெளிநடப்பு சபை நடவடிக்கையினை வெளிநடப்பு செய்தனர்.

இதனால் சபையில் சற்று அமளி ஏற்பட்டது. எனினும் ஆளும் தரப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் மூன்று உறுப்பினர்களும் சபை நடவடிக்கை கலந்துகொண்டனர்.இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் தண்டாயுதபாணி கருத்து தெரிவிக்கையில்,

"கல்வி, காணி மற்றும் போக்குவரத்து என பல துறைகளுக்கு தனித்தனி புத்தகங்கள் தரப்பட்டன. அவற்றை வாசித்து விளங்கவே நேரம் போதாது. இந்த நிலையில் எமது தரப்பிற்கு ஒதுக்கப்பட்ட 2 மணித்தியாலங்களையும் வழங்காமல் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அது மாத்திரமின்றி காணி என்பது எமக்கு பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கின்றது. இந்த நிலையில் இவர்கள் அதற்கு போது[illegible] என்பது எமது மக்களுக்கும் ஜனநாக ஒழுங்கிற்கும் முறை[illegible]" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெற்றோர்களே ! ஸாலிஹான பிள்ளைகளே உருவாக்குங்கள்

தொடர்ச்சி..

சமகால உலகில் இஸ்லாமியச் சிறுவர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. நாகரீகம் வளர்ந்து செல்லும் போக்கில் நமது செயற்பாடுகளையும் அமைத்துக் கொண்டு எதிர்காலத்தில் குறித்த ஒரு சினிமா நடிகரின் பெயரைக் கூறிக்கொண்டு இவரைப் போல ஆக வேண்டும் என்று வாய் கூசாமல் சொல்கின்றனர்.

இவர்களிடத்தில் தொழுகை எப்போது கடமையாக்கப்பட்டுள்ளது. அல்லது இந்த ஸஹாபியைப் பற்றி உனக்குத் தெரியுமா? என்று கேட்டால் மௌனத்தைத் தவிர வேறுபதில் இல்லை. குர்ஆனில் ஒரு சிறிய பறாவைக் கேட்டாலும் சரியாகக் கூற முடியாத நிலை. ஆனால் பல சினிமாப் பாடல்களை ஒரு வரியும் விடாது பாடக்கூடியவர்களாக இருப் பார்கள்.

மேலும் நமக்குப் பிடித்த நடிகர்கள் நடிகைகள் கிரிக்கட் வீரர்களின் புகைப்படங்களை சேகரிப் பதில் ஆர்வமுடையவர்களாக இருக் கின்றனர். இதற்குக் காரணம் அவர் களது இஸ்லாமியக் கல்வி குறிப்பிட்ட நேரத்தோடு சுருங்கி விட்டு இருப்பதாகும். உலகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல் மார்க்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

எமது சிறுவர்கள் இஸ்லாமியப் படுத்தப் படாமைக்கு மற்றொரு காரணம் பெற்றோரின் துர் நடத்தை களாகும். இத்தகைய பெற்றோர்கள் நம்மில் நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டுவராமலும், நமது பிள்ளை களையும் நல்ல விதத்தில் வழி நடத்தாமலும் உள்ளனர். தாம் சிகரட் புகைப்பதற்காக தம்பிள்ளைகளிடம் அவற்றை வாங்கிவருமாறு ஏவக்கூடிய பெற்றோர்களும் உள்ளனர்.

இப்படியான பழக்கங்களைப் பார்க்கின்ற சிறுபிள்ளைகள் தந்தை செய்கின்ற இதுவும் ஒரு நல்ல பழக்க மாகத்தான் இருக்குமென யோசிப் பார்கள். பருவ வயதை அடைந் தவுடனே அவர்களும் சிகரட்டுடன் சுத்தக் கூடியவர்களாக இது உருவாக்குகின்றது.

இந்த நேரத்தில் அந்தப் பெற்றோர் எவ்வாறு அதனைக் கண்டிக்க முடியும்? அவ்வாறு அவர் கண்டித்தாலும் அப்பிள்ளை எதிர்த்துக் கேள்வி கேட்கமாட்டான். என்பதில் என்ன நிச்சயம்? சிறிய பருவத்திலேயே இது பாவமான பாரியம் உடம்புக்குக் கெடுதலானது என்று முன்னேர கூறப்பட்டிருக்குமானால் இந்நிலை ஏற்பட்டிருக்காது என்பதைப் பெற்றோர்கள் சிந்திக்கப்பட வேண்டும். பொதுவாக சிறுவர்கள் நமது பெற்றோர் ஒரு செயலை ஆர்வத்துடன் செய்யும் போது நாமும் அச்செயலைச் செய்ய வேண்டும். (தொடரும்..........)

அப்துல் ஜபார் நளிமியா

## தொலைக்காட்சியும் குடும்பக் கதையும்

தொடர்ச்சி...

அல்லாஹ் மனிதனுக்கு வழங் கிய ஒரு நி.:மத்தான் ஓய்வு இந்த ஓய்வை எவ்வாறு மனிதன் பயன் படுத்தினான் என்பதை அல்லாஹ் மறுமையில் விசாரிப்பான். ஆகவே திரையிலும் ஏனைய பயனற்ற விடய ங்களிலும் மூலக்கிப் போகின்ற உள்ள ங்களே! அல்லாஹ் வின் தூதருடைய எச்சரிக்கைகளையும் கொஞ்சம் சிந்தி த்துணரக் கூடாதா!

அல்லாஹ்வின் தூதர் அவர் கள் கூறியிருக்கின்றார்கள் ஒரு முஸ்லிமானவன் யூத கிறிஸ்தவர்களை சானுக்குச் சான் பின்பற்றும்போது மறுமையை எதிர்பாருங்கள். என்ற முன்னறிவிப்பானது எத்துனை துல்லி யமானது எனும் யதார்த்தத்தை இன்று காணலாம்.

பொழுது போக்கு TV இருக் கிறது என்ற காரணத்தால் எல்லா செயல்களையும் எடுத்து எடுத்து அதில் செல்லும் எல்லா நிகழ்ச்சி களையும் பார்க்கிறார்கள். பயனற்ற விடயங்களை எல்லாம் பொழுது போக்காக பார்க்கத்தான் வேண்டுமா? TVயிலும் பிரயோசனம் இருக்கிறது. ஆனால் இந்த மனித உள்ளங்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பாத அளவு பாழாக்கப்பட்டுள்ளது.

TVயிலும் இன்று அலாலாஹ் வின் அற்புதமான படைப்புக்களின் தோற்றங்களும் இயல்புகளும் அவற்றின் இயக்கங்களும் பற்றி அழகாக விவரிக்கப்படுகின்றன. பூச்சி, புழுக்கள் போன்ற நிறைய ஜீவரா சிகளின் வாழ்க்கை வட்டம் என்பன விவரணப்படங்களாக காட்டி அதை விளங்கப்படுத்துகின்றது.

வெறுமனே ஆபாசமும் அனாச் சாரமும் நிறைந்த சீர்கெட்ட சினிமாவின் மோகத்தால் உள்ளங்களை அசுத்தமான நிலையிலேயே வைத்துக் கொள்வது மிகவும் கெட்டதாகும். உள்ளங்களில் உள்ளதை எல்லாம் அறிந்தவன் அல்லாஹ் உள்ளத்தை தூய்மைப்படுத்தியவன் வெற்றி பெற் றான் என்று அல்லாஹ் கூறுகிறான்.

சினிமா பார்க்கின்ற பெண்கள் நிச்சயமாக கெட்ட பெண்களாகவே இருப்பார்கள். பெருபாலும் சினிமாவில் மூழ்கிய பெண்கள், ஆண்கள் நாவு கூசாமல் சொல்வது சினிமாவில் காட்ட ப்படுவது. குடும்பக்கதைகள் இவர் களை அதிலும் சில படிப்பினைகள் இருக்கின்றது என்கிறார்கள். இவர்களை நினைக்கும் போது அழுவதா? சிரிப்பதா? பரிதாபம்தான்.

சினிமாவில் உள்ளத்தை தொலைத்து விட்டவர்களே கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தாலே புரியும். சினிமாத்துறை என்பது வெறுமனே ஒரு மானம் கெட்ட தொழில்தான். இதில் எந்த ஒரு முன்மாதிரியுமே நடிப்பவனுக்கோ பார்ப்பவனுக்கோ கிடையவே கிடையாது.

இருப்பதாயின் ஒருவரை நரகத்திற்கு தயார் செய்ய வேண்டிய அத்தனை முன்மாதிரிகளும் அழகாக தாராளமாகவே இருக்கும். மற்றபடி எந்த ஒருவரின் நடைமுறைக்கும் ஒத்து வராது இஸ்லாமிய உள்ளங்கள் சிந்திக்க வேண்டும்.

தொப்புல் தெரியுமலவிற்கு ஆடையை மேலும் கீழுமாக குறைத்து ஆணைவிட மிக அவலட்சனமாக அணிந்து கொண்டு ஆட்டம் போடுகிறா ர்களே இதுவா முன்மாதிரி!

அமீர் பாத்திமா நுஸைனா
நடுத்தீவு மூதூர் -07

தொடரும்.........




### முகச்சுருக்கம் மாற



**தேவையான பொருட்கள்:-** ஆவாரம் பூ காய்ந்த பொடி -5g, புதினா இலை காய்ந்த பொடி- 5g, கடலைமா- 5g, பயிற்றம் மா- 5g.

இவற்றை எடுத்து ஒலிவ் எண்ணெய் கலந்து நன்கு குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவி வந்தால் முகச் சுருக்கம் நீங்கும். தொடர்ந்து 15 நாட்கள் செய்து வந்தால் என்றும் இளமை யுடன் இருக்கலாம்.

### முகம் பளபளக்க

காலை வேளையில் கடலைமாவை நீரில் குழைத்து முகத்தில் தடவி 30 நிமிடங்கள் ஊறவைத்த பின் முகம் கழுவி வந்தால், முகம் பளபளக்கும். இதைத் தொடர்ந்து 15 நாட்கள் செய்து வந்தால் விரைவில் பலன் கிடைக்கும். பாதாம் பருப்பு சருமத்திற்கு ஒரு அற்புதப் பொருள் எனலாம் 5பாதாம் பருபினை ஊறவைத்து பால் சேர்த்து விழுதாய் அரைத்து தேன் சில துளி சேர்த்து முகத்தில் பூசுங்கள் 20 நிமிடம் ஊறிய பின் முகத்தைக் கழுவுங்கள் பளிச்சிடும் முகம் இப்போது.

### வரண்ட கூந்தல்



கூந்தல் வறண்டு நுனிகள் பிளவுபட்டுக் காணப்படும். தலை வரட்சியால் சொறிச்சல் போன்ற உணர்வு ஏற்படும்.

பராமரிப்பு முறை: வாரமொரு முறை ஷம்போவுடன் Conditioner பாவித்து குளிக்கவும். முடிகள் காய்ந்து Manage பண்ண முடியாமலிருந்தால் Hair Spray பாவிப்பதை தவிர்த்து Cream Coditioner அல்லது Leave on Conditioner Spray பாவித்து தலைவாரவும், ஒலிவ் எண்ணெயை சூடாக்கி தலைக்கு மசாஜ் செய்து பொலீத்தின் பையினால் தலையை மூடி 30 நிமிடங்கள் விட்டு கழுவவும் (மாதம் இரு முறை செய்யலாம்)

### கலவையான கூந்தல்

தலைப்பகுதி எண்ணெய்த் தன்மையுடனும் கூந்தலின் நுனிப்பகுதி வரண்டும் காணப்படும். பராமரிப்பு முறை:- தலையில் அரிப்பு அல்லது அழுக்கை உணரும் போதெல்லாம் குளிக்கவும். பிளவுபட்ட முடியின் நுனிகளை அவ்வப்போது வெட்டவும்.

### பொதுவான கூந்தல் பராமரிப்புக் குறிப்பு

Protein Containing உள்ள பழங்கள், காய்கறிகள் உண்ணவும். தரமான Brand Shampoo Conditioner பாவிக்கவும். முடியின் நுனிகளை மாதமொரு Trim செய்க. Elastic (இலாஸ்டிக்) bands இனால் கொண்டை போடுவதைத் தவிர்க்கவும். தலையில் இரத்தச் சுற்றோட்டம் அதிகரிக்க மாதமொருமுறை Hot oil Massage செய்க. Dull hair உள்ளவர்கள் ஹென்னா சிகிச்சை செய்யலாம். Over wash செய்தல் கூடாது. அளவுக்கதிகமாக நீரை ஊற்றுவதால் Scalp இல் உள்ள Natural oil குறைந்து விடும்

### உங்கள் கூந்தல் எந்த ரகம் [பராமரிக்கும் முறைகள்]

#### சாதாரண கூந்தல்

எண்ணெய்த்தன்மை காணப்படாது சுமாரான பளபளப்புடன் இலகுவில் சீவக் கூடியதாக இருக்கும்.

பராமரிக்கும் முறை:- Fingertips இனால் ஷம்போவை தலையிலும் நுனிப் பகுதியிலும் தேய்த்துக் கழுவவும். Warm Water இல் Egg yoln (முட்டை மஞ்சள் கரு) கலந்து முடிகளின் வேர்க்கால்களில் பூசி 10 நிமிடங்கள் ஊறவிட்டு ஷம்போ போட்டுக் கழுவவும்.

#### எண்ணெய்ப்பசை கூந்தல்

எண்ணெய்ப் பசை வேர்க்கால்களில் பரவி ஒட்டிக்கொண்டிருப்பதால் அழுக்கு காணப்படும். ஷம்போ பாவித்து குளித்தாலும், எண்ணெய்க் கசிவினால் முடியானது அடர்த்தியற்று காணப்படும். அநேகமாக பொடுகு காணப்படும். பராமரிக்கும் முறை:- Lemon based ஷம்போ பாவிக்கவும் Final vinsing இன்போது சிறிதளவு வினிகர் கலந்து நீர் ஊற்றவும். மாதமொருமுறை முட்டையுடன் தேசிக்காய்சாறு கலந்து Sealp இல் பூசி 10 நிமிடங்கள் ஊற விட்டு கழுவவும்.

## சமையல் குறிப்பு

### கோன்பிளா மஸ்கட்

தேவையான பொருட்கள்:- கோன்பிளா- 100g, சீனி- 1/4kg, மாஜரின்-100g, ஏலம்பொடி-1தே.கரண்டி, கேசரிப்பவுடர்- 2சிட்டியளவு, கஜீ-100g, உப்பு-1சிட்டியளவு, தண்ணீர்- 3தம்ளர்.

செய்முறை: பாத்திரத்தில் கோன்பிளா இட்டு, சீனி சேர்த்து கலந்து கொண்டபின்பு தண்ணீரை விட்டுக் கரைத்துக் கேசரிப்பவுடரை அளவிற்கு சேர்த்துக்கொள்க.

தாச்சியை அடுப்பில் வைத்து மாஜரீனை விட்டு உருகியதும் சிறிதாக வெட்டி, அதில் கஜீவையிட்டு பொரித்தெடுத்துக் கொண்டபின், அதனுள் கரைத்து வைத்துள்ள மாக்கலவையை ஊற்றி, இடைவிடாது பொரித்த கஜீவையும் சேர்த்துக் கலவை மஸ்கட் பதத்திற்கு இறுகத் தொடங்கியதும் இறக்கி, எண்ணெய் பூசிய தட்டில் கொட்டிப்பரவி ஆறியதும் துண்டுகளாக வெட்டவும்.

சர்மிலா
அதிஷா அழகு நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணவத்தை வடிசல் திட்டத்தை நிறுத்துக - மாகாண உறுப்பினர்கள்

அட்டாளைச்சேனை, கோணாவத்தை வடிச்சல் திட்டத்தினை பார்வையிடுவதற்காக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தலைமையிலான குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

கோணாவத்தை வடிச்சல் திட்டத்தை உடன் நிறுத்துமாறு கிழக்கு மாகாண சபையின் வரவு செலவு திட்ட வாசிப்பின் போது முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து கிழக்கு மாகாண அமைச்சர்களான விமலவீர திஸாநாயக்க, எம்.எஸ்.உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபையின் மு.கா. உறுப்பினர்களான ஏ.எல்.தவம், ஏ.எல்.எம். நஸீர் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உயரதிகாரிகள் இதனை நேரில் சென்று பார்வையிட்டனர்



## திருமலை சண்முக வித்தியாலய 90வது ஆண்டு நிறைவு

திருகோணமலை ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரியின் 90வது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் நடை பெற்ற போது தமிழ் இன்னிய இசை அணியினரையும், அதிதிகளையும் படத்தில் காணலாம்





## மண்டூர் நிருபருக்குப் பாராட்டு

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த 30-11.2013 அன்று மிகவும் கோலாகலமாக இடம பெற்றது. அங்கு மட்டு மாவட்டத்தில் 50 ஆண்டுகள் ஊடகத் துறையினை நிறைவு செய்தமைக்காக மண்டூர் வீரகேசரி நிருபர் விசேட அதிதியாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டதனையும் படங்களில் காணலாம். (சச்சு)





## மட்டக்களப்புப் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிப் பயிலுனருக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் நிகழ்வு இன்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் காலை 09 மணிக்கு நடைபெறுகின்றது

## பட்டிருப்பு கல்வி வலயத்தின் சாதனையாளர் பாராட்டு விழா

மட் - பட்டிருப்பு கல்வி வலயத்தினரின் ஏற்பாட்டில் 2012ம் ஆண்டுக்கான சாதனையாளர் பாராட்டு விழா நேற்று 02.12.2013 களுதாவளை ம.வி ஒன்றுகூடல் மண்டபத்தில் வலயக்கல்விப்பணிப்பளர் திருமதி. ந. புள்ளநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனர் கௌரவ மொஹான் விஜவிக்கிரம அவர்களும், அதிவிசேட அதிதியாக ஜனாதிபதியின் ஆலோசகரும், மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களும், விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண கல்வி செயலாளர் திரு.என்.ஏ.,ஏ புஸ்பகுமார கல்விப்பணிப்பாளர் ஜனாப்.எம்.ரி.ஏ நிஸாம் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் வலயமட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டங்களில் மற்றும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றும் சாதனைப்புரிந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கும் மற்றும் ஓய்வு பெறும் ஆசிரியாகளுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌர விக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நரேஸ்)

## மட்டக்களப்பில் பேரணி

எயிட்ஸ் தினத்தன்று மட்டக்களப்பில் சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் மகளிர் சாரணியர் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் சமுக ஆர்வலர் இணைந்தது விழிப்புணர்வுப் பேரணியொன்றை நடாத்தினர்.



## வீதி முழுவதும் வெள்ளம் - பயணிப்பது எவ்வாறு?

கடந்த சில வருடங்களாக மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய ஊறணி செல்வவிநாயகர் கோவில் வீதி செப்பனிடாததால் தற்பொழுது இரு பாரிய குழிகள் காணப்படுகின்றன.

அத்துடன் அவ் வீதி முழுவதும் நீர் தேங்கி நிற்கின்றது. அதனால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக மலைமுரசிற்குத் தெரிவித்தனர் (ஜோ.அ.ச.கோ)



## பொதுப் பேருந்துனருடன் பொருதினர் தனியார் பேருந்தினர்

கந்தளாய் - திருகோணமலை வழித்தடத்தில் பயணிக்கும் தனியார் மற்றும் பொதுப் பேருந்துனர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து அடிதடி ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்கத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் கைகலப்பாக மாறி தாக்குதல் நடவடிக்கைகளில் இரு தரப்பும் ஈடுபட்டுள்ளது.

இத் தாக்குதல் நடவடிக்கையில் பொதுப் பேருந்தினர் எஸ்.ஏ சுனில் மற்றும் எம்.ஏ சம்பத் ஆகியோர் காயமடைந்து பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து தாக்கியவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இம் மோதல் வழக்கு அடுத்த மாதம் 3ம் திகதி நடைபெறவுள்ளது.

இந் நிலையில் கடந்த 05ம் திகதி காலை ஐந்து மணியில் இருந்து மதியம் 12 மணிவரை இவ் வழித்தடத்தில் பயணிக்கும் பேருந்துகள் எவையும் பயணிக்கவில்லை.

நெடுந்தூர வண்டிகள் பயணத்தில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. (அனுர - உதயா)

## பட்டிப்பளையில் விழிப்புணர்வு



பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தித் திட்ட வேள்ட்விசன் நிறுவனம், பட்டிப்பளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து தொற்றாத நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டத்தையும், ஓர் இலவச மருத்துவப் பரிசோதனையும் நடாத்தியுள்ளது.

அப் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு ஆரம்பத்திலும், பின்னர் 2013.12.04ம் திகதி பட்டிப்பளைப் பிரதேசத்தில் முனைக்காட்டு கிராமத்தில் உள்ள மக்களுக்கான விழிப்புணர்வும், பரிசோதனையும் இடம்பெற்றது. (நரேஸ்)

## புலமைப் பரிசில் வெற்றியாளர்கள்

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டும் நிகழ்வு சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் 2013.12.04 இன்று நடைபெற்றது.

இந் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ரீ.எம். தௌபீக் அவர்களின் தலைமையில் நடைபெற்றதுடன் பிரதம அதிதியாக சம்மாந்துறையின் புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் ஆளுயு. ஜலீல்இ மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான றகீம்,ஆர்.ஆ. லாபீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் காதர் மற்றும் சமாதானக்கல்வி இணைப்பாளர். ஏ.ஏ. முகம்மட் ... கைறுன்னிஸா ... கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களை வளப்படுத்திய ஆசிரியர்களான றகீமா மன்சூர், ஏ.பீ. பரீதா, எஸ்.எல். மன்சூர், அமீறா றிம்லான் ஆகியோருடன் இணைந்து சித்தி பெற்ற 41 மாணவர்களுக்கு நினைவுச்சின்னமும் ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. (பர்ஹான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " நகரிற்குட் பிரவேசிக்க மற்றுமோர் வீதீ"



திரு.தெ.நவனீதன்

திருகோணமலை நகறிற்குள் பிரவேசிப் பதற்கு மற்றுமோர் வீதி யொன்றை நிர்மா ணிப்பது தொடர்பான திட்ட வரைபுகளை குடிமகன் ஒருவர் முன்மொழிந்துள்ளார்.

தற்போது குச்சவெளி சுற்றுவட்டத்தின் ஊடாகத் திரும்பிய பின் ஒரேயொரு பிரதான பாதையே திருமலை நகருக்குள் நுழைவதற்கும் வெளிச் செல்வதற்கும் காணப்படுகின்றது. அப்பாதைக்கு மாற்றீ டாக மற்றொரு பாதை தொடருந்துப் பாதைக்குச் சமாந்திரமாக அமைக்கும் முன் மொழிவையே திரு.தெ.நவனீதன்......... 13




## "பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிப்போம்"



திருக்கோணமலை மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட பெண்கள் வலையமைப்பானது இவ்வருடமும் 16 நாள் செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றது. குறிப்பாக இவ்வருடத்தில் பிரதேசபெண்கள் பெண்கள் வலையமைப்பினால் மேற் கொள்ளப்படும் நிகழ்வுகள் அனைத்தும் 13

## அடையாளம் காண உதவுங்கள்





கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பரிவில் வாழைத்தோட்டம் என்னும் இடத்தில் தலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் சடலம் ஒன்று குச்சவெளி காவல்துறையால் மீட் கப்பட்டது. இச்சடலம் இதுவரை அடை யாளம் காணப்படவில்லை. இச்சடலத்தை அடையாளம் காண்பதற்காக குச்சவெளி காவல்துறை பொதுமக்களின் உதவிகளை கோரியுள்ளனர். 13

## கிழக்கிற்கு மிதக்கும் புத்தகக் கப்பல்




மிதக்கும் புத்தக உலகமான லோகோஸ் ஸ்கோப் (Logos Hope) என்ற பாரிய புத்தகக் கப்பல் எதிர்வரும் மாதங்களில் திருமலையில் நங்கூரம் இடவுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் கொழும்பிற்கு வருகைதந்திருந்த இக்கப்பலை நுழைவுக் கட்டணமாக நூறு ரூபாவை செலுத்தி சுமார் நூறாயிரம் பேர் பார்வையிட்டது குறிப்பிடதக்கது. 13

## தேசமான்ய விருது




தேசமானிய விருது பெற்ற வைத்திய கலாநிதி வரலாற்று ஆய்வாளரும் எழுத்தாளரும் த.ஜீவராஜ் அவர்களை வாழ்த்துகிறோம்.

நண்பர்கள்

## மகுடம் ஆறாவது இதழ் அறிமுகம்



கடந்த 0212.2013 மட்டக்களப்பு தாளன்குடா கல்வியியல் கல்லூரியில் நடைப் பெற்ற மகுடம் ஆறாவது இதழ் அறிமுக விழாவில் நயவுரை வழங்கிய பீடாதி-பதி எஸ்.ராஜேந்திரன் மகுடம் ஆசிரியர் வி.மைக்கல் கொலின், கவிஞர். அசபாய்வா, தலைமையுரை வழங்கிய கவிஞர் ஊர்வசி, கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்கள்- மாணவிகள் ஆகியோரைக் காணலாம் 13



கடந்த ஞாயிற்றுக்கிழமை 01.12.2013 அன்று எமது நிலாவெளி MIC Computers நிறுவனத்தில் கணித பாட கருத்தரங்கு ஒன்றை எமது நிறுவனத்தில் நாடாத்தியுள்ளது

## "ஜோசப்பியன் சிறார்கள் தினம்"




கடந்த 30.11.2013 அன்று மதியம் 2.00 மணிக்கு புனித மரியாள் கல்லூரியின் திரேசியன் கேட்போர் கூடத்தில் ஜோசப்பியன் முன்பள்ளியின் அதிபர் அருட்சகோதரி. குளோரியா தலைமையில் நடைபெற்றது.

## " மொபைலா? மொபைலா?"




மட்/வின்சட் மகளிர் பாடசாலையில் " மொபைலா? மொபைலா?" என்னும் குறுந்திரைப்படம் சாருநியின் இயக்கத்தில் கோபிகாவின் தயாரிப்பில் ஒளிப்பதிவினை வேனூகாவும் இசையை சன்ஜீத் வழங்க தனுஜா,கோபிகா,கோனிதா,புணிதா,லக்சிதா என பலரின் திறமைகள் வழங்க' பட்டன

(ஜோ.அ.ச.கோ)



இராமகிருஸ்ணமிஸன் சுவாமி சதுர்ப்புஜானந்தாஜீ மகராஜ் ஆசியுரை வழங்கினார். அதிதிகளாக வலய ஆரம் பக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சச்சிதானந்தம் அவர்களும் திரு.த.யுவராஜ், உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.கலாமகேந்திரராஜா திரு.ம.மனோராஜ் அதிபர் சிவானந்தா தேசிய பாடசாலை ஆகியோர்

மட்டக்களப்பு, கல்லடி, வேலூர் சக்தி வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அதிபர் திருமதி. தே. அருட்ஜோதி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு கலந்து சிறப்பித்தனர். பல்வேறு போட்டிகளில் திறமைகளை வெளிப் படுத்திய மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிக-ளால் வழங்கி [illegible]

(சச்சு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org